
# வானவில்

**VAANAVIL**

இதழ் 170 | மாசி 2025

ISSUE 170 | February 2025


# சுதந்திரம் யாருக்காக?




இலங்கை இவ்வருடம் (2025) பெப்ருவரி 4 ஆம் திகதி தனது 77 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியுள்ளது.

இவ்வருட சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் சிறப்பு அம்சம் என்னவெனில், இதுவரை காலமும் நடைபெற்றது போல் பாரம்பரிய அரசியல் கட்சிகளின் அரசாங்கத்தின் கீழ் அல்லாமல், தேசிய மக்கள் சக்தி என்ற ஒரு புதிய முன்னணியின் அரசாங்கத்தின் கீழ் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டமையாகும்.

அதிலும் குறிப்பான விசேடம் என்னவென்றால், தேசிய மக்கள் சக்தியின் தலைமைக் கட்சியான ஜே.வி.பி., தன்னை ஒரு இடதுசாரிக் கட்சியெனச் சொல்லிக் கொண்டு, பெப்ருவரி 4ஆம் திகதி சுதந்திர தினம் உண்மையான சுதந்திர தினமல்ல என நீண்ட காலமாகச் சொல்லி வந்த நிலையில், ஜனாதிபதியாகவுள்ள அந்தக் கட்சியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க தலைமையில் சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெற்றமைதான்.

ஜே.வி.பி. மட்டுமல்ல, இலங்கையின் பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பனவும், ஏனைய பல இடதுசாரிக் குழுக்களும் கூட பெப்ருவரி 4 ஆம் திகதி கிடைத்தது உண்மையான சுதந்திரமல்ல எனத்தான் கூறி வந்தன.

ஆனால், காலப்போக்கில் முதலாளித்துவக் கட்சிகள் மட்டுமின்றி, அநேகமாக எல்லா இடதுசாரி இயக்கங்களுமே பெப்ருவரி 4 ஆம் திகதியை இலங்கையின் சுதந்திர தினமாக ஏற்றுக் கொண்டு விட்டன.

இடதுசாரி இயக்கங்கள் ஆரம்பத்தில் இலங்கையின் சுதந்திர தினமாக பெப்ருவரி 4 ஆம் திகதியை ஏற்றுக் கொள்ளாமல் இருந்ததிற்கு அன்றைய காலகட்டத்தில் சில காரணங்கள் இருந்தன.

காரணம், இலங்கையை அரசாண்ட பிரித்தானிய காலனித்துவவாதிகள் 1948 பெப்ருவரி 4 ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதாகச் சொல்லி, தமது நேரடி ஆட்சியைக் கைவிட்டு நாட்டை விட்டு வெளியேறினாலும், அவர்களது பிடி பல வகைகளிலும் இலங்கையில் தொடர்ந்தது.

முக்கியமாக, இலங்கையின் பொருளாதாரம் சகல துறைகளிலும் அவர்களது கைகளிலேயே இருந்தது. நாடாளுமன்றம் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு என்பன அவர்கள் வகுத்தபடிதான் இருந்தன. வெளிவிவகாரக் கொள்கையையும் அவர்களே தீர்மானித்தார்கள். அது மாத்திரமின்றி, கட்டுநாயக்க விமானத்தளத்தில் அவர்கள் தமது விமானப் படையையும், திரிகோணமலை துறைமுகத்தில் தமது கடற்படையையும் வைத்திருந்தனர். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது என்று சொன்னாலும், அது தொடர்ந்தும் பிரித்தானிய மகாராணிக்கு கீழே 'டொமினியன்' அந்தஸ்து என்ற நிலையிலேயே இருந்தது.

இவற்றில் பல 1956 இல் ஆட்சிக்கு வந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியவாதியான எஸ்.டபிள்யு.ஆர். பண்டாரநாயக்கவாலும், பின்னர் ஆட்சிக்கு வந்த அவரது மனைவி திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலங்களிலும் படிப்படியாக மாற்றி அமைக்கப்பட்டன. அவர்கள் எடுத்த இந்த நடவடிக்கைகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகள் பல முட்டுக்கட்டைகள் போட்டார்கள்.

இந்த நடவடிக்கைகளை அவர்கள் சுதந்திர இலங்கைக்கு என பிரித்தானியரான சோல்பரி பிரபு என்பவர் வகுத்தளித்த அரசியல் சாசனத்தின்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# ரஷ்யா-உக்ரைன் மோதல் முடிவுக்கு வருமா?

**உ**க்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை தொடங்கி எதிர்வரும் பெப்ரவரி 22ந் திகதியுடன் 3வது ஆண்டு நிறைவடைய உள்ளது. பல இலட்சம் உயிரிழப்புகளின் மத்தியில், தொடர்ந்து தீவிர மோதல் இடம்பெற்று வரும் சூழலில், கடந்த வருடம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களின்போது ட்ரம்ப், தான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் ரஷ்யா–உக்ரைன் மோதல் நடந்திருக்காது எனவும் தான் வெற்றி பெற்றால் 24 மணி நேரத்தில் மோதலை நிறுத்துவேன் எனவும் கூறியிருந்தார். இதில் 24 மணி நேரத்தில் மோதலை நிறுத்துவதென்பது சாத்தியமில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

2010 ஆம் ஆண்டு உக்ரைனில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் விக்டர் யனுகொவிச் (Viktor Yanukovych) ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் ரஷ்யா சார்பாளராக மேற்குலகினரால் முத்திரை குத்தப்பட்டார். இவரது ஜனாதிபதி பதவிக் காலம் 2015 வரை இருந்த போதிலும், இவரது ஆட்சிக்கு எதிராக 4 மாத காலமாக உக்ரைனின் தலைநகரில் (Kyiv) ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு, 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 22ந் திகதி அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். மைடான் (Maidan) சதிப்புரட்சி என்றழைக்கபட்டு வரும் இந்த ஆட்சி மாற்றத்தின் பின்னரே உக்ரைனின் தீவிர தேசியவாதப் படைகள் (AZOV) ரஷ்ய இனத்தவர்களுடன் நேரடி யுத்தத்தை ஆரம்பித்தனர்.

உக்ரைன் நேட்டோவில் இணையக்கூடாது, அத்தோடு ரஷ்ய இனத்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிரீமியா ரஷ்யாவுடன் இணைந்ததையும், டொன்பாஸ் மற்றும் டொனெஸ்க் பிராந்தியங்களின் குடியரசுப் பிரகடனங்களையும் உக்ரைன் அங்கீகரிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்துவதாக ரஷ்யா திரும்பத்திரும்பக் கூறி வந்திருக்கின்றது.

கடந்த மூன்று வருடங்களாக எந்த நேரத்திலும் மூன்றாம் உலகப்போர் ஒன்று மூண்டுவிடுமோ என்ற அச்சம் நிலவி வருகின்றது. அடுத்த உலகப் போர் என்பது உலகை மயானமாக்கும் என்பதை எல்லா உலகத் தலைவர்களும் மிகத்தெளிவாக புரிந்தே வைத்துள்ளனர். மேற்குலக நாடுகளும் (நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள்) ரஷ்யாவும் பனிப்போர் காலத்தின் பின்னர் மீண்டும் பரம விரோதிகளாக மாறிவிட்டனர். உக்ரைனுக்கு நீண்ட தூர ஏவுகணைகளை வழங்கி ரஷ்யாவின் நிலப்பரப்பைத் தாக்கும் மேற்குலக நாடுகளுக்கு எதிராக அணு ஆயுதத்தை பயன்படுத்துவது என்ற ரஷ்யாவின் அறிவிப்பை எவரும் வெறும் எச்சரிக்கையாக மாத்திரம் பார்க்கக்கூடாது.

இந்த நிலையில் ஜனவரி 20ம் திகதி ட்ரம்ப் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் உக்ரைன் – ரஷ்யா மோதலை 100 நாட்களில் நிறுத்துவேன் என கூறினார். 'ட்ரம்ப் இப்படித்தான் அடிக்கடி ஏதாவது சொல்வார்' என்றே பலரும் இதனை பொருட்படுத்தாது கடந்து போய்க்கொண்டிருந்தனர். பின்னர் ட்ரம்பின் வழமையான பாணியில் ரஷ்ய ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேசிவிட்டோம் என்று அவர் திடீரென்று ஊடகங்களுக்குத் தெரிவித்த செய்தி வெளிவந்தது.

ட்ரம்பின் அறிவிப்பினை ரஷ்யா உறுதிப்படுத்தினால் மாத்திரமே நம்பலாமென உலகம் முழுவதும் காத்துக் கொண்டிருந்த வேளையில், அமெரிக்கர் ஒருவர் ரஷ்யச் சிறையிலிருந்தும் ரஷ்யர் ஒருவர் அமெரிக்கச் சிறையிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டனர். தொடர்ந்து, ட்ரம்பும் புட்டினும் 90 நிமிடங்கள் தொலைபேசி வாயிலாக உரையாடியதாகவும், உக்ரைன் – ரஷ்யா மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகளில் இரு நாடுகளும் மிக நெருக்கமாக இணைந்து செயல்பட ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அமெரிக்காவும் ரஷ்யாவும் அறிவித்தன. மேலும், அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பேற் ஹெக்செத் (Pete Hegseth) பிரஸ்ஸலில் (Brussels) வைத்து ரஷ்யா கைப்பற்றி வைத்துள்ள பகுதியையும் நேட்டோவில் சேரும் எண்ணத்தையும் உக்ரைன் கைவிட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். இதனால் உக்ரைன் – ரஷ்யா மோதல் விரைவில் முடிவுக்கு வரலாம் என்ற பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தை மூலம் ரஷ்யா–உக்ரைன் மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒரு விரிவான ஒப்பந்தத்திற்கு அருகில் கூட ட்ரம்ப் நிர்வாகம் இல்லை என்பது தெளிவானது. மேலும் இழப்புகளின் மத்தியிலும் ரஷ்யாவே ஒட்டுமொத்த வெற்றியை நோக்கிச் செல்வதால், நிரந்தரமான தீர்வுக்கு ரஷ்யாவின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். மேற்கு நாடுகளில் இருந்து வரும் எதிலும் ரஷ்ய மக்களுக்கு பூச்சிய நம்பிக்கை இருப்பதாலும், உக்ரைனியர்கள் விருப்பமில்லாத பங்காளிகளாக இருப்பதாலும், பிரித்தானியா உட்பட ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மோதலைத் தொடர விரும்புவதாலும் ட்ரம்பின் நிர்வாகத்தின் முயற்சியை முன்னோக்கி நகர்த்துவது என்பது ஒரு பாரிய மலையை நகர்த்துவது போன்றதாகும்.

ட்ரம்பின் அண்மைக்கால கனடா, மெக்சிகோ வளைகுடா, பனாமா கால்வாய் மற்றும் கிரீன்லாந்து தொடர்பான மிகவும் சர்ச்சைக்குரிய பேச்சுக்களை வரிசைப்படுத்தினால், ரஷ்யா–உக்ரைன் தொடர்பான அவரது நிலைப்பாட்டை எவரும் நேர்மறையாக பார்க்க முடியாது. எனினும் உக்ரைனுக்கு ஆயுதங்களும் பணமும் வழங்கி ரஷ்யாவிற்கு எதிராக மேற்குலக நாடுகள் நடத்திய நிழல் யுத்தத்தில் (proxy war) மேற்குலக நாடுகள் தோற்றுவிட்டதாக அவர் உணரலாம். அதனால் தோல்வியுற்ற தரப்பினர் வெற்றிபெற்ற தரப்பினரின் நிபந்தனைகளை ஏற்பதைத் தவிர வேறு எந்த மார்க்கமும் இல்லையென்ற கட்டத்திற்கு அவர் வந்திருக்கலாம். சவூதி அரேபியாவில் ட்ரம்பும் புட்டினும் சந்தித்து பேசவுள்ளனர். பேச்சுவார்த்தைகளின் முடிவுகளை பொறுத்திருந்து பார்ப்போம்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**வானவில்**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இஸ்ரேலிய தலைவர்களுக்கு எதிராக விடுத்துள்ள பிடியாணை!




**நெ**தர்லாந்து தலைநகர் ஹேக்கில் (Hague) உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court) இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவிற்கு (Benjamin Netanyahu) எதிராகவும், இஸ்ரேலின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவாவ் ஹல்லான்ற் (Yoav Gallant) இற்கு எதிராகவும் விடுத்துள்ள பிடியாணைகள் (Arrest Warrants) இஸ்ரேலின் வரலாற்றில் எதிர்பாராத ஒரு நிகழ்வாகும்.

இந்த இருவரில் எவராயினும் இந்த நீதிமன்றத்தின் 124 உறுப்பு நாடுகள் எவற்றிலேனும் பிரவேசித்தால், அந்த நாடு அவர்கள் மனித குலத்துக்கு எதிராகச் செய்த குற்றங்களுக்காக அவர்களைக் கைது செய்து அந்த நீதிமன்றத்திடம் ஒப்படைக்க முடியும்.

ஆனால் இந்த நாடுகள் சிலவற்றுக்கு கைது செய்யப்படும் பயமின்றி இஸ்ரேலிய பிரதமர் பயணிக்க முடியும். உதாரணத்துக்கு, இஸ்ரேல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உறுப்பினராக இல்லாதபடியால் அமெரிக்கா இந்தப் பிடியாணை குறித்து அலட்டிக்கொள்ளாது. எனவே நெத்தன்யாகு பாதுகாப்பாக அமெரிக்காவுக்கு வந்து பலஸ்தீன மக்களுக்கு எதிரான தனது இனப்படுகொலைக்கு மேலும் ஆயுதங்களைக் கோர முடியும்.

பின்வரும் காரணங்களுக்காக பிரதமர் நெத்தன்யாகுவிற்கு எதிராகவும், முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஹல்லன்ற் இற்கு எதிராகவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது:

யுத்தத்தின் ஒரு வழிமுறையாக பட்டினி நிலைமையை உருவாக்கியமை, கொலைகள், சித்திரவதைகள், பொதுமக்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல்கள் என்பனவாகும்.

நீதிமன்றத் தீர்பபின்படி இந்த இருவரும் காஸா பிரதேசத்தில் வாழும் மக்கள் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியத் தேவைகளான உணவு, தண்ணீர், மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், எரிபொருள், மின்சாரம் என்பன அவர்களுக்குக் கிடைக்க விடாமல் தடுத்திருக்கிறார்கள்.

அத்துடன் இந்த இருவரும், சர்வதேச சட்டத்தை மீறி காஸா மக்களுக்கு சர்வதேச நிவாரணப் பொருட்கள் செல்வதையும் தடுத்திருக்கிறார்கள். அது மாத்திரமின்றி, நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி காஸா மக்களுக்கு மனிதாபிமான அமைப்புகள் அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு செல்வதையும் தடுத்திருக்கிறார்கள்.

காஸா மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவதைத் தடுப்பதற்கு இஸ்ரேலிடம் நியாயப்படுத்தக்கூடிய காரணங்கள் எதுவும் காணப்படவில்லை எனவும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. எனவே, இஸ்ரேலிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் திட்டமிட்ட ரீதியில் காஸாவில் வாழும் மக்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்டவை என நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம், இஸ்ரேலின் மீது ஆயுதத் தடை மற்றும் பொருளாதாரத் தடைகளை விதிக்க முடியும்.

இந்த நீதிமன்றத் தீர்ப்பு குறித்து கருத்து வெளியிட்ட ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார அமைச்சர் ஜோசப் போறெல் (Joseph Borrell) இந்த பிடியாணைகள் அரசியல் நோக்கம் கொண்டவை அல்லாதபடியால் அதற்கு மதிப்பளிக்க வேண்டும் எனக் கோரியுள்ளார். பல அரசாங்கங்களின் சிரேஸ்ட அதிகாரிகளும் இவ்வாறான கருத்துக்களையே வெளியிட்டுள்ளனர்.

முக்கியமான மேற்கு நாடுகளான பெல்ஜியம், கனடா, அயர்லாந்து மற்றும் இங்கிலாந்து என்பன தாம் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிப்பதால், இஸ்ரேலிய தலைவர்கள் தமது நாடுகளின் எல்லைகளுக்குள் பிரவேசிக்க முடியாது என அறிவித்துள்ளன.

இஸ்ரேலின் சில கூட்டாளி நாடுகளைப் போலவே அமெரிக்காவின் பைடன் நிர்வாகமும் நீதிமன்றத்தின் தீர்ப்பை "அத்துமீறல்" என வர்ணித்துள்ளது.

குற்றவியல் நீதிமன்றத்தின் ஒரு உறுப்பு நாடான பிரான்ஸ், தொழில்நுட்ப ரீதியாகப் பார்க்கையில் இஸ்ரேலுக்கு அதை ஏற்க வேண்டிய கடப்பாடு இல்லை எனக் குறிப்பிட்டுள்ளது. இத்தாலி வெகு சாதாரணமாக இந்த பிடியாணைகளை நடைமுறைப்படுத்துவது "சிக்லானது" எனக் கூறியுள்ளது.

இஸ்ரேலைப் பொறுத்தவரை இந்தப் பிடியாணைகள் என்ன பிரதிபலிப்பை ஏற்படுத்தியுள்ளன? சியோனிச (Zionist) கட்சிகளான ஒற்ஸ்மா யெகுடிட் (Otzma Yehudit) முதல் ஜனநாயகவாதிகள் (Democrats) வரை நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்துள்ளன. "சியோனிச இடது" (Zionist Left) தலைவரான யெய்ர் கோலான் (Yair Golan) கூட நெத்தன்யாகுவைப் பாதுகாப்பதுடன், பின்வருமாறு எழுதுகிறார்:

நெத்தன்யாகுவிற்கும் ஹலன்றுவிற்கும் எதிரான பிடியாணைகள் அவமானத்துக்கு உரியவை மட்டுமின்றி, இஸ்ரேலிய பாதுகாப்பு படையின் ஒவ்வொரு வீரருக்கும் அதிகாரிக்கும் உண்மையான ஆபத்தானதும் கூட". கோலான்,

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பை "யூத – எதிர்ப்பு" என வர்ணிப்பதுடன், இதை "இது ஒரு நவீன ட்ரேபஸ் விசாரணை" என்றும், (Modern Dreyfus trial), அதற்கு ஏற்பட்ட முடிவே இதற்கும் ஏற்படும்" என்றும் குறிப்பிடுகிறார். (ட்ரேபஸ் விசாரணை என்பது 18 ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில் பிரான்சில் இதே பெயருடைய ஒரு இராணுவ அதிகாரி மீது நடத்தப்பட்ட விசாரணையைக் குறிக்கும்) மேலும் அவர் எழுதுகையில், "பாரபட்சமான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பையும், போலித்தனமான நடவடிக்கைகளையும் இஸ்ரேல் நிராகரிக்க வேண்டும்".

மறுபக்கத்தில், சமத்துவத்துக்கும் சமாதானத்துக்குமான ஜனநாயக முன்னணி என்ற ஹடாஸ் கூட்டணி (Hadash Coalition, the Democratic Front for Peace and Equality) கூறுகையில்,

"ஹேக்கில் உள்ள நீதிமன்றத்தின் தீர்ப்பு தெளிவான ஆதாரங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்டது. காஸா யுத்தம் என்பது பாரதூரமான போர்க்குற்றங்களையும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களையும் கொண்டது. நெத்தன்யாகுவும் ஹலன்ற்றும் காஸாவின் மொத்த அழிவுகளுக்கும், அங்குள்ள மக்கள் வகைதொகையில்லாமல் கொல்லப்பட்டதற்கும் பொறுப்பாளிகள் ஆவர். அவர்கள் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டும். இந்த முடிவற்ற யுத்தம் காஸாவையும் லெபனானையும் மட்டும் அழிக்கவில்லை, பலஸ்தீன மக்களின் சுய நிர்ணய உரிமையை மறுத்துள்ளதோடு, இஸ்ரேலிய சமூகத்தையும் அழித்துள்ளது. அத்துடன், இஸ்ரேலை ஒரு புறக்கணிக்கப்பட்ட, குற்றவியல் நாடாகவும் ஆக்கியுள்ளது". (Rejected and Criminal State)

ஹடாஸ் பிரதிநிதிகள் மட்டுமே போர் நிறுத்தத்திற்கும் சமாதானத்துக்குமாக குரல் எழுப்புபவர்களாக உள்ளனர். இது தொடருமாக இருந்தால் இறுதியில் "ஆக்கிரமிப்புக்கு முடிவு கட்டுவதுடன், இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் ஒரு அரசியல் தீர்வுக்கும் வழிவகுக்கும்" என அவர்கள் கூறுகின்றனர்.

இந்தக் கூட்டணி நொவம்பர் 29 இல் நடைபெற்ற பலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒருமைப்பாட்டுத் தினத்தில் கைகோர்த்து நிற்கும்படி தனது அங்கத்தவர்களையும் நண்பர்களையும் வேண்டிக் கொண்டது. ஒவ்வொரு ஆண்டும் இதே தினத்தில் பலஸ்தீன மக்கள் மேற்குக்கரை, காஸா பகுதி, கிழக்கு ஜெருசேலம் என்பனவற்றில் அமையவுள்ள சுதந்திர பலஸ்தீன நாட்டில் வாழ்வதை ஆதரித்து பல நாடுகளில் பேரணிகள் நடைபெறுவதுண்டு.

இந்த ஆண்டு இது இஸ்ரேலிலும் யூத – அரபு கூட்டமைப்பு மற்றும் சமாதான பங்களிப்பு (Jewish - Arab Coalition Peace Partnership) அமைப்பினால் நாட்டின் பல பகுதிகளில் கொண்டாடப்பட்டது. அந்த நிகழ்வுகளின் போது போருக்கு எதிராகவும், இஸ்ரேல் – பலஸ்தீன சமாதானத்துக்காகவும் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன.

(இந்தக் கட்டுரை அமெரிக்காவில் இருந்து வெளிவரும் Peoples World என்ற முற்போக்கு பத்திரிகையில் வந்த கட்டுரையொன்றின் சுருக்கமாகும்)

## ஜனாதிபதி, அமைச்சர்கள் வாய்ச்சொல் வீரர்களாகவே செயற்படுகிறார்கள்!

"**போலி**யாக கைது செய்து, விளக்கமறியலில் வைத்தால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வோம். ஆகவே செய்வதை முறையாக செய்யுங்கள் என்று அரசாங்கத்திடமும் அமைச்சர் ஆனந்த விஜேபாலவிடமும் குறிப்பிட்டுக்கொள்கிறோம். சட்டத்தின் பிரகாரம் கைதுகள் இடம்பெறவில்லை" என பிதிரு ஹெல உருமயவின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் பங்காளி கட்சித் தலைவர்களுடன் பேச்சபேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2015 நல்லாட்சி அரசாங்கமும் அரசியல் பழிவாங்கலை முன்னிலைப்படுத்தி செயற்பட்டது. அக்காலகட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் இளைய புதல்வர் யோஷித்த ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு, 40 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். அவருக்கு எதிராக இன்று வரை வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

அதேபோல் நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கைது செசெய்யப்பட்டு, 92 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவருக்கு எதிராக இன்று வரை வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் எதிர்ப்பு குழுவின் செயலாளராக பதவி வகித்த ஆனந்த விஜேபால இந்த அரசாங்கத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கிறார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தற்போதைய அரசியல் கைதுகளுக்கு தலைமை தாங்குகிறார். நல்லாட்சி அரசாங்கத்தின் செயல்பாடுகள்தான் தற்பொழுது இடம் பெறுகிறது.

கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டதன் பின்னர் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. நாங்கள் இம்முறை இதற்கு இடமளிக்கப் போவதில்லை.

போலியாக கைது செய்து விளக்கமறியலில் வைத்தால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வோம். ஆகவே செய்வதை முறையாக செய்யுங்கள் என்று அரசாங்கத்திடமும் அமைச்சர் ஆனந்த விஜேபாலவிடமும் குறிப்பிட்டுக்கொள்கிறோம்.

கைது செய்யப்படுவதை ஆரம்பத்திலேயே அறிவோம். இருப்பினும் அதனை வெளிப்படுத்தவில்லை என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே தற்போதைய கைதுகள் சட்டத்தின் பிரகாரம் இடம்பெறுவதில்லை. அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டது என்பது வெளிப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கவில்லை. ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் வாய்ச்சொல் வீரர்களாகவே செயற்படுகிறார்கள்.

அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாக குறைவடைந்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்தின் நிலையை அறிந்துகொள்ளலாம். பொய் மற்றும் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி அதிகாரத்தை கைப்பற்றலாம்.

இருப்பினும் அது நிலையற்றதாகும் என்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும் என்றார்.

# மார்க்சியமும் தனிமனிதரும்

*இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) 24 ஆவது அகில இந்திய மாநாடு நடைபெற உள்ள நிலையில், கட்சியின் தத்துவார்த்த ஏடான THE MARXIST (தி மார்க்சிஸ்ட்) இல் வெளியாகியுள்ள தேர்வு செய்யப்பட்ட கட்டுரைகளின் சாராம்சம் இங்கு வெளியிடப்படுகிறது.*

*மார்க்சியம் என்பது ஒவ்வொரு தனி மனிதரையும் புரட்சிகரமான சமூக மனிதராக மாற்றும் வல்லமை கொண்டது. உலகில் தோன்றிய தத்துவங்களிலேயே மார்க்சியத்திற்கு மட்டுமே அத்தகைய சக்தி உண்டு. 1985 இல் வெளியான இக்கட்டுரையில் (The Marxist Volume: 03, No. 4 October-December, 1985 - Marxism And The Individual - Georgy Simirnov) இதை விளக்குகிறார் சோவியத் ஒன்றியத்தின் மார்க்சிய ஆய்வாளர்களில் ஒருவரும், சோவியத் மார்க்சிய – லெனினிய ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக செயலாற்றியவருமான ஜோர்ஜி சிமிர்னோவ்.*

மார்க்சிய–லெனினிய கோட்பாட்டில் தனிமனிதர் பற்றிய ஆய்வு என்பது வெறும் ஓர் அம்சம் மட்டுமல்ல, அதற்கும் மேலானது. வரலாற்றின் பொருள்முதல் விதிகளின் அடிப்படையில் சமூகத்தை புரட்சிகர மாற்றம் செய்வதற்கான மார்க்சியக் கோட்பாடு என்பது உழைக்கும் மக்களின் விடுதலைக்கும், தனிமனிதனின் பன்முக வளர்ச்சிக்குமான அறிவியல்பூர்வ திட்டமாகும்.

## 1. தனிமனிதரின் இயல்பு

மார்க்ஸ் ஒரு தனிமனிதரை, ஒருவரது இயல்பு, சுதந்திரம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை சமூகத்துடன் பிரிக்க முடியாத வகையில் இணைத்துப் பார்க்கிறார். மார்க்சின் பகுப்பாய்வின் தொடக்கப்புள்ளி தனிமனிதர் அல்ல, சமூகமே ஆகும். மக்கள் திரள்களின் செயல்பாடுகளுக்கான அடிப்படை, ஊக்கமளிக்கும் காரணங்கள் அவர்களின் பொருளாதார நலன்களே என்பதே மார்க்சியத்தின் கருத்தாகும். இந்த இரு அம்சங்கள் – பொருளாதார நலன்கள் மற்றும் வர்க்கம் சமூகக் குழு சார்ந்த அடையாளம் – ஆகியவையே இறுதியில் மக்கள் திரள்களின் பண்புகளையும் நடத்தைகளையும் தீர்மானிக்கின்றன.

மனிதரின் இயல்பு பற்றி மார்க்ஸ் கூறும் முக்கியமான முடிவு: "மனிதரின் இயல்பு சாராம்சத்தில் ஒரு குறிப்பிட்ட தனிமனிதரின் சுருக்கமல்ல. அது



அனைத்து சமூக உறவுகளின் மொத்தமாகும்."

## 2. அந்நியமாதல் பற்றிய கோட்பாடு

உழைப்பின் விளைபொருட்களாக மாறும் செயல்முறையையும் உற்பத்தி முடிந்தவுடன் அந்த உற்பத்திப் பொருட்களில் இருந்து உழைக்கும் வர்க்கம் அந்நியமாகி விடுவதையும் சமமாகக் கருத முடியாது. உற்பத்தி இருக்கும் வரை, மனிதரின் ஆற்றல்கள் பொருட்களாக மாறுவது தொடரும். ஆனால் உழைப்பின் அந்நியமாதல் என்பது வரலாற்று ரீதியாக மாறக்கூடிய ஒரு நிகழ்வு ஆகும். இது உபரி உற்பத்தியுடன் தோன்றுகிறது. இந்த உபரி உற்பத்தியை சுரண்டும் வர்க்கங்கள் – அடிமை உடைமையாளர்கள், நிலப்பிரபுக்கள், முதலாளிகள் – தமக்காக எடுத்துக் கொள்கின்றனர்.

**ஜோர்ஜி சிமிர்னோவ்**

தனியார் சொத்துரிமை நிலவும் சூழலில், தொழிலாளியின் உழைப்பால் உருவாக்கப்பட்டு குவிக்கப்படும் செல்வம், அந்தத் தொழிலாளியையே சுரண்டும் கருவியாக மாறுகிறது. பொருளாதார கட்டாயம், அரசியல் அடக்கு முறை, ஆன்மீக ஒடுக்குமுறை மற்றும் ஏமாற்று ஆகியவற்றின் அனைத்து வடிவங்களையும் தொழிலாளிக்கு எதிராக திருப்பும் பொருள் சக்தியாக இது மாறுகிறது. இதனால்தான் "தொழிலாளி தனது உழைப்பின் விளைபொருளை பிறருடையதாக... தனக்கு எதிராக நிற்கும் பகை சக்தியாக பார்க்கிறார்."

உற்பத்தியின் விளைபொருள் மட்டுமல்ல, உற்பத்தி செயல்முறை கூட மனிதரை அந்நியப்படுத்துகிற செயலாக்கமாக உள்ளது: "தொழிலாளிக்கு உழைப்பு என்பது அவரது இயல்புக்கு வெளியேயுள்ள ஒன்று. அவர் தன்னை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பதிலாக மறுக்கிறார் மகிழ்ச்சியடையாமல் துன்பப்படுகிறார், தனது உடல் மற்றும் மன ஆற்றல்களை சுதந்திரமாக வளர்த்துக் கொள்வதற்கு பதிலாக தனது உடலை சோர்வடையச் செய்து தனது மனச்சிந்தனை சக்தியை அழிக்கிறார்."

## 3. சுதந்திரமும் சமூக மாற்றமும்

மார்க்சிய–லெனினியம் கூறுவது என்னவெனில், தொழிலாளியின் சுதந்திரம் முதலாளித்துவ சுரண்டல் மற்றும் உற்பத்தி சாதனங்களின் மீதான தனியார் சொத்துரிமை ஒழிப்போடு நேரடியாக தொடர்புடையது. கம்யூனிஸ்டுகள் அனைத்து சொத்துக்களையும் அழிக்க விரும்புகிறார்கள் என்ற விமர்சனத்திற்கு பதிலளிக்கையில், மார்க்சும் ஏங்கெல்சும், இந்த குற்றச்சாட்டுகள் உண்மையில் கூலி உழைப்பைச் சுரண்டும் 'சுதந்திரத்தை' – பெரும்பான்மையான தொழிலாளர் வர்க்கத்தை அடக்கி சிறுபான்மையாக உள்ள முதலாளிகள் வளர்வதற்கான சுதந்திரத்தை – பொதுவான தனிமனித சுதந்திரமாக காட்ட முயற்சிப்பதை மறைக்கவே பயன்படுத்தப்படுகின்றன என்பதை அம்பலப்படுத்தினர்.

வர்க்கப் போராட்டங்களும் வர்க்க முரண்பாடுகளும் நிறைந்த பழைய சமூகத்திற்கு பதிலாக, உழைக்கும் மக்களின் கூட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இதில் ஒவ்வொருவரின் சுதந்திரமான வளர்ச்சியே அனைவரின் சுதந்திரமான வளர்ச்சிக்கான

நிபந்தனையாக இருக்கும்.

முதலாளித்துவ தனிமனிதரின் நலனும் சுதந்திரமும் அவரது சொத்தை – செல்வத்தை அடிப்படையாகக் கொண்டது. இங்கு தனிமனித சுதந்திரம் என்பது கூலி உழைப்பை சுரண்டும் சுதந்திரத்திற்கு சமமானது. அதே நேரத்தில், பாட்டாளி வர்க்க தனிமனிதரின் நலனும் சுதந்திரமும் சுரண்டலிலிருந்து விடுதலை பெறுவதிலும், உற்பத்தி சாதனங்களின் கூட்டுடைமையிலும், சுதந்திரமான ஆக்கப்பூர்வமான சுய வெளிப்பாட்டிலும், அவரது ஆற்றல்கள் மற்றும் திறமைகளின் வளர்ச்சியிலும் உள்ளது.

**4. சோசலிசத்தில் தனிமனித வளர்ச்சி**

சோசலிச சமுதாயத்தில்தான் முதன் முறையாக மக்களின் சமூகப் பண்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மத, இன, தேசிய அல்லது பிற குழு அடையாளங்களை விட பொதுவான சமூக அடையாளங்களே முன்னிலை பெறுகின்றன. இது கூட்டு உணர்வு மற்றும் சர்வதேசிய மனப்பான்மை வளர்ச்சியில் வெளிப்படுகிறது. மக்கள் தங்கள் உழைப்பால் நாட்டை வலுப்படுத்துவதிலும், சமூக மேலாண்மையில் பங்கேற்பதிலும் ஆர்வம் காட்டுவார்கள்.

சோசலிச தனிமனிதர் என்பவர் கம்யூனிச சித்தாந்தத்தின் நோக்கங்களையும் கொள்கைகளையும் உள்வாங்கிக் கொண்டவர். தனிப்பட்ட நலன்களுக்கு மேலாக பொது நலன்களை முன்னிறுத்துபவர். ஆனால் இந்த மாற்றம் தானாக நிகழ்வதில்லை. மக்களை கூட்டுறவு மனப்பான்மையில் கல்வி புகட்டி மறு உருவாக்கம் செய்வதில் சில சிரமங்கள் தெளிவாகத் தெரிகின்றன.

**நடைமுறை செயல்பாடுகள்**

சோசலிச சமூகத்தின் இயல்பு என்னவென்றால், அது மக்கள் திரளின் செயல்பாடுகள் மூலமாகவும், மக்களின் உயர்ந்த செயல்திறன் மூலமாகவும் மட்டுமே வெற்றிகர மாக செயல்பட முடியும். லெனின் வலியுறுத்தியது போல, சோசலிசம் மேலிருந்து ஆணைகளால் கட்டப்படுவதில்லை – அதுமக்களின் படைப்பாக்கமே. பொருளாதாரம், சட்டம் மற்றும் ஒழுங்கு என எந்த பிரச்சனையை எடுத்துக் கொண்டாலும், அதன் சோசலிசத் தீர்வுக்கு மக்கள் திரளின் உணர்வுப்பூர்வமான பங்கேற்பு தேவைப்படுகிறது. ஏனெனில் இது அவர்களின் நலன்களைப் பற்றியது, அவர்களின் ஒற்றுமை, திறமை மற்றும் கடின உழைப்பை பொறுத்தது.

**நிறைவாக…**

மார்க்ஸின் அறிவியல் முன்னறிவிப்புகள், முதலாளித்துவத்தின் உண்மையான போக்குகளை ஆய்வு செய்ததன் விளைவாக, மனிதவாழ்க்கையால் பரந்த அளவில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. நிச்சயமாக மனித வாழ்க்கையானது கோட்பாட்டு ஆய்வுகளை விட சிக்கலானது, பன்முகமானது மற்றும் முரண்பாடுகள் நிறைந்தது. எனினும், உண்மையான சோசலிச சமுதாயத்தின் உருவாக்கம் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் மற்றும் லெனின் கூறியவற்றின் உண்மைத் தன்மையை உறுதியாக நிரூபிக்கிறது.

மனிதனின் இயல்பு வெறும் கருத்தியல் அல்ல. அது அனைத்து சமூக உறவுகளின் மொத்த வடிவமே.

தொழிலாளி தனது உழைப்பின் விளைபொருளை எதிரியாகவே காண்கிறார்.

முதலாளித்துவ சுரண்டலிலிருந்து விடுதலை பெறாத எந்த சுதந்திரமும் வெறும் ஏமாற்றமே.

தனிப்பட்ட நலனுக்கு மேலாக பொது நலனை முன்னிறுத்துவதே சோசலிச மனிதரின் பண்பு.

ஒவ்வொருவரின் சுதந்திர வளர்ச்சியே அனைவரின் சுதந்திர வளர்ச்சிக்கான நிபந்தனை.

# இந்தியாவின் 33.80 டிரில்லியன் டொலர் பணத்தை பிரித்துக்கொண்ட இங்கிலாந்தின் 10% பணக்காரர்கள் - ஒக்ஸ்ஃபாம் அறிக்கை

காலனித்துவ காலத்தில் இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்கு கொண்டு செல்லப்பட்ட 64.82 டிரில்லியன் அமெரிக்க டொலர்களில் 33.80 டிரில்லியன் (Trillion) டொலர்கள் அந்நாட்டின் 10% பணக்காரர்கள் பிரித்துக்கொண்டதாக ஒக்ஸ்ஃபாம் (Oxfam) எனும் உரிமைகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக பொருளாதார மன்றத்தின் வருடாந்திர கூட்டத்தின் முதல் நாளில், உலகளாவிய சமத்துவமின்மைக்கான பின்னணி குறித்த அறிக்கையை 'ஒக்ஸ்பாம் இன்டர்நேஷனல்' (Oxfam International) வெளியிட்டது. அதில், இங்கிலாந்தின் காலனி நாடாக இந்தியா இருந்தபோது, இங்கிருந்து கொண்டு செல்லப்பட்ட செல்வங்கள் குறித்தும், அவை எவ்வாறு அந்நாட்டின் பெரும் பணக்காரர்களுக்கு பங்கு பிரிக்கப்பட்டது என்பது குறித்தும் ஆதாரத்துடன் அறிக்கை வெளியிட்டுள்ளது.

பல்வேறு ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட அந்த அறிக்கைக்கு 'Takers, not Makers' என தலைப்பிடப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: 1765 மற்றும் 1900 இற்கு இடையிலான காலனித்துவத்தின் ஒரு நூற்றாண்டு காலத்தில் இங்கிலாந்து இந்தியாவிலிருந்து 64.82 டிரில்லியன் அமெரிக்க டொலர்களை கொண்டு சென்றது. இதில் 33.8 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நாட்டின் பணக்காரர்களில் 10 சதவீதத்தினருக்குச் சென்றதாக எங்களின் மதிப்பீடு தெரிவிக்கிறது.

இங்கிலாந்தில், இன்று பணக்காரர்களாக இருப்பவர்களில் கணிசமானவர்கள், தங்கள் குடும்ப செல்வத்தை அடிமைத்தனம் மற்றும் காலனித்துவத்திலிருந்து பெற்றவர்கள். குறிப்பாக அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டபோது பணக்காரர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது. அந்த இழப்பீடு எவ்வளவு என்பதில் இருந்து இதனை கண்டுபிடிக்க முடியும்.

1765 மற்றும் 1900 இற்கு இடையிலான 100 ஆண்டுகளுக்கும் மேலான காலனித்துவத்தின் போது இங்கிலாந்து இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்ற பணத்தில் 52 சதவீதத்தை அந்நாட்டின் 10 சதவீத பணக்காரர்கள் பெற்றுள்ளனர். அப்போதிருந்த புதிய நடுத்தர வர்க்கத்தினர் 32 சதவீத பணத்தைப் பெற்றுள்ளனர்.

நவீன பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக கிழக்கிந்திய கம்பெனி ஒரு முன்னோடியாக இருந்தது. நவீன காலத்தில், பன்னாட்டு நிறுவனங்கள், பெரும்பாலும் ஏகபோக அல்லது கிட்டத்தட்ட ஏகபோகமாகச் செயல்படுகின்றன. உலகளாவிய

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…**

# திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கம் ஒரு வாக்கால் தோற்கடிக்கப்பட்டதின் வரலாறு!

*(இலங்கை நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகமாக (Secretary General) 33 வருடங்கள் பணியாற்றிய நிஹால் செனிவிரத்ன (Nihal Seniviratne) அவர்கள் எழுதிய நினைவுக் குறிப்புகள் கட்டுரையின் முக்கியமான பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன)*

1960 யூலையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் மூலம் உலகின் முதலாவது பெண் பிரதமராகி உலக சாதனை படைத்தார் திருமதி பண்டாரநாயக்க.. அவர் முதலில் செனட் சபையின் ஒரு உறுப்பினராக இருந்து பின்னர் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்தார். பிற்காலத்தில் திருமதி இந்திரா காந்தி, திருமதி கோல்டா மெய்ர், திருமதி மார்கரெட் தட்சர், திருமதி பெனாசிர் பூட்டோ ஆகியோரும் தத்தமது நாடுகளின் தலைமைப் பதவிகளுக்கு வந்தனர்.

திருமதி பண்டாரநாயக்க, திரு.சி.பி.டி. சில்வா அவர்களை காணி அமைச்சராகவும், டொக்டர் என்.எம்.பெரேரா அவர்களை நிதியமைச்சராகவும், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவை விவசாய அமைச்சராகவும், ரி.பி. இலங்கரத்னவை வர்த்தக அமைச்சராகவும், திரு.மைத்திரிபால சேனநாயக்கவை சபைத் தலைவர் மற்றும் கிராமிய மற்றும் கைத்தொழில் வளர்ச்சி அமைச்சராகவும் கொண்ட 15 பேர் எண்ணிக்கையுள்ள அமைச்சரவைக்குத் தலைமை தாங்கினார். இது பலம் வாய்ந்த அமைச்சரவையைக் கொண்ட அசைக்க முடியாத அரசாங்கமாக இருந்தது.

ஆனால் நான்கு வருடங்களின் பின்னர் நிலைமைகள் அரசாங்கத்தை உலுக்குபவையாக மாறி, 1964இல் நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டு, புதிய நாடாளுமன்றத் தொடர் அதே வருடம் நொவம்பரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. புதிய நாடாளுமன்றத் தொடர் கவர்னர் ஜெனரல் வில்லியம் கோபல்லவவினால் (Governor-General William Gopalawa) ஆரம்பித்து வைக்கப்பட்ட பின்பு, வழமையான வெஸ்ற் மின்ஸ்ரர் (Westminster tradition) சம்பிரதாயத்துக்கு ஏற்ப, கவர்னர் ஜெனரல் நாடாளுமன்றத்தை



ஆரம்பித்து வைத்ததுக்கு நன்றி தெரிவித்து சபையில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டது. இதை நாங்கள் சிம்மாசன பிரசங்க (Throne Speech) உரையின் மீதான விவாதம் எனக் குறிப்பிடுவதுண்டு.

இது வழமையாக இரண்டு நாள் விவாதமாக நடைபெறும். சபைத் தலைவர், மேன்மைமிகு கவர்னர் ஜெனரலுக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை முன்மொழிந்த பின்னர் காலி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டொக்டர் டபிள்யு. தகாநாயக்க (Dr.W.Dahanayake) பின்வரும் திருத்தம் ஒன்றை முன்வைத்தார்:

“....மக்களை வாட்டும் பிரச்சினைகளான வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு மற்றும் வீட்டுப் பிரச்சினை என்பனவற்றுக்கு அரசாங்கம் தீர்வு காணத் தவறியதால் மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்துள்ளனர்”.

விவாதம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக சபாநாயகர் ஹியூ பெர்னான்டோ (Huge Fernando) தனது அலுவலகத்துக்கு என்னை அழைத்து, குறிப்பிட்ட நாளில் சபை நடவடிக்கைகளுக்கு தன்னால் தலைமை தாங்குவதற்கு இயலாமல் இருப்பதாகவும், எனவே வேறு மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்யுமாறும் என்னிடம் கேட்டுக் கொண்டார். இந்த நாளில் சபையில் மிகவும் முக்கியமான விவாதம் ஒன்று நடந்து, அன்று மாலை ஒரு தீர்க்கமான வாக்கெடுப்பு நடக்க இருப்பதால் இந்தத் தினம் மிகவும் முக்கியமான ஒரு தினம் என நான் அவருடன் கடுமையாக விவாதித்தேன். நான் அவருடன் அரை மணி நேரத்துக்கு மேலாக விவாதித்தபோதிலும், தனக்கு அன்றைய தினம் மிகவும் முக்கியமான தனிப்பட்ட அலுவல் ஒன்று இருப்பதாக அவர் வலியுறுத்தினார்.

அதன் பின்னர் நான் அதைப் புரிந்துகொண்டு, இன்னொரு அரசாங்க உறுப்பினரை சபைக்குத் தலைமைதாங்கத் தெரிவு செய்ததால், அரசாங்கத்தின் பலம் ஒரு வாக்கால் குறைவடைந்துவிட்டது. பிரதி சபாநாயகர் டி.ஏ. ராஜபக்ச – D.A.Rajapakse – (மகிந்த ராஜபக்சவின் தகப்பனார்) நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கினார். மாலை நேரத்தில் நாடாளுமன்றத்தின் முகப்பில் உலவிய ஒரு செய்தி அனைவரையும் முற்றாக வியப்பில் ஆழ்த்தியது.

அந்தச் செய்தி முதலில் மிக இரகசியமாக வைக்கப்பட்ட போதிலும் பின்னர் தெரிய வந்தது, எதிர்க்கட்சித் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன சிம்மாசனப் பிரசங்க விவாத முடிவில் வாக்கெடுப்பு ஒன்றைக் கோரி அரசைக் கவிழ்ப்பதற்கு சதித்திட்டம் தீட்டியுள்ளதாக அறியக் கிடைத்தது. வெளிநாடுகளில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டதாக பின்னர் நாம் அறிந்து கொண்டோம். அவர்களில் ஈ.எல்.சேனநாயக்க (E.L.Senanayake) லண்டனிலும், பரிஸ் பெரேராவும் (Paris perera) இன்னும் சிலரும் வெளிநாடுகளில் விடுமுறையைக் கழித்துக் கொண்டும் இருந்தனர். அவர்கள் அனைவரும் திடீரென நாடாளுமன்ற முகப்பில் காணப்பட்டனர்.

ஆனால் மிகப்பெரிய ஆச்சரியம் என்னவென்றால், தேநீர் இடைவேளைக்குப் பின்னர் பிற்பகல் 4.30 மணிக்கு சபை கூடிய போது, காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் சி.பி.டி. சில்வா தனக்கு அரசாங்க உறுப்பினர்களின் முன்வரிசையில் ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் இருந்து எழுந்து சபை நடுவே வந்து

சபாநாயகருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, எதிர்க்கட்சி வரிசையில் இருந்த ஆசனம் ஒன்றில் அமர்ந்து கொண்டார். அவருக்கு விசுவாசமான வேறு சில அரசாங்க உறுப்பினர்களும் அவரைத் தொடர்ந்து எதிர்க்கட்சி வரிசை ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர்.அவர்களில் இந்திரசேன டி சொய்ஸா (Indrasena de Zoysa) மற்றும் எட்மன்ட் விஜேசூரிய (Edmund Wijesuriya) ஆகியோரும் அடங்குவர். மொத்தமாக 17 அரசாங்க கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சிப் பக்கம் சென்று விட்டனர்.

அன்று மாலை 7 மணி அளவில் சிம்மாசனப் பிரசங்க உரை மீதான விவாதம் முடிந்து, வாக்கெடுப்பு ஆரம்பமானது. நாங்கள் அங்கீகரித்துள்ள நாடாளுமன்ற விதி முறைகளுக்கு அமைவாக, சிம்மாசன பிரசங்க விவாதத்தின் மீதான வாக்கெடுப்புக்கு முன்னதாக டொக்டர் டபிள்யூ.தகநாயக்காவால் முன்மொழியப்பட்ட திருத்தப் பிரேரணை முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதற்காக நாடாளுமன்ற மணி மூன்று நிமிடங்கள் ஒலித்தது.

அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லையெனக் கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட பொழுது, அரசாங்கத்துக்குச் சார்பான சகல உறுப்பினர்களும் “இல்லை” எனக் குரலெழுப்ப. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் “ஆம்” எனக் குரலெழுப்பினர். சோர்வும் ஏமாற்றமும் ஏற்பட்ட நிலையில், “ஆம்” அல்லது “இல்லை” எனக் கூறியவர்களின் பெயர் விபரங்களை நாம் பதிவு செய்ய ஆரம்பித்தோம். கணக்கெடுப்பு முடிந்ததும் அந்தப் பத்திரத்தை தலைமை அதிகாரியிடம் கையளித்தோம். நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக 74 வாக்குகளும், எதிராக 73 வாக்குகளும் பதிவாகி இருந்தன. அரசாங்கம் ஒரேயொருவாக்கால் தோல்வியடைந்திருந்தது.

அரசாங்கத் தரப்பில் முன்வரிசையில் அமர்ந்திருந்த மைத்திரிபால சேனநாயக்க (Maithripala Senanayake) மற்றும் பதியுதீன் மொகமத் (Baduideen Mohamed) ஆகியோர் முடிவைப் பலமாக ஆட்சேபித்து, “நீங்கள் பிழையாக கணக்கிட்டுள்ளீர்கள். திரும்பவும் வாக்குகளை எண்ணுங்கள்” எனக் கூறினர். எனது இருதயம் ஒரு நிமிடம் நின்று போனது. ஏனெனில், தற்செயலாக நாம் தவறிழைத்திருந்தால், எமது வேலைக்கு ஆபத்தாக முடிந்துவிடும். நாம் மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு, வாக்குகளைத் திரும்பவும் எண்ணினோம். திரும்பவும் எண்ணிய பத்திரத்தைப் பார்வையிட்ட தலைமை அதிகாரி, நாம் முதலில் தெரிவித்த எண்ணிக்கை சரியானது என அறிவித்தார்.

ஆனால், நாடாளுமன்ற நெறிமுறைகளுக்கு அமைய திருத்தப் பிரேரணை மீண்டுமொரு முறை வாக்கெடுப்புக்கு விடப்படும் என அரசாங்க கட்சி உறுப்பினர்களுக்கு நான் தெரியப்படுத்தினேன். ஆனால் திரும்பவும் வாக்கெடுப்பு நடந்த பொழுது, முன்பிருந்தது போலவே, “ஆம்” அல்லது “இல்லை” என்ற முடிவு இருந்தது. அரசாங்கம் இன்னும் ஒரு உறுப்பினரை தமக்கு ஆதரவாக வாக்களிக்க வைக்க முடியாமல் போனதால், ஒரு வாக்கால் அரசாங்கம் தோற்றுப்போனது.

நான் இங்கு கட்டாயமாக ஒரு விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். அதாவது, ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்தச் சதியைத் திட்டமிட்ட வேளையில், அரசாங்கத்தின் இரண்டோ மூன்றோ உறுப்பினர்கள் வெளிநாடுகளில் இருந்தனர். அரசாங்கம் அதைக் கவனத்தில் கொண்டு அவர்களைத் திருப்பி வரவழைக்க முயற்சி எடுக்கவில்லை. நிதியமைச்சர் டொக்டர் என்.எம்.பெரேரா உலக வங்கிக் கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றிருந்தார். அவரது லங்கா சமசமாஜ கட்சியின் இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினரான திரு.பேர்னாட் சொய்சாவும் (Bernard Soysa) நாட்டுக்கு வெளியே இருந்தார்.

திருமதி பண்டாரநாயக்க தனது ஆலோசகர்கள் மூலம் அரசியலமைப்பு விவகாரங்களை நன்கு அறிந்திருந்தபடியால், அவர் பிறிதொரு தினத்துக்கு நம்பிக்கை வாக்கெடுப்பை வைத்திருந்தால், அவரது அரசாங்கம் நிச்சயமாக நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றிருக்க முடியும்.

ஆனால் அந்த மகத்தான பெண்மணி நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி கண்டதால், இரு வாரங்கள் கழித்து டிசம்பர் 17 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. பின்னர் 1965 மார்ச்சில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு, அதில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்று டட்லி சேனநாயக்க (Dudley Senanayake) பிரதமரானார்.

ஆனால், 1970 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருமதி பண்டாரநாயக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று மீண்டும் நாட்டின் பிரதமரானார்.

ஆனால் மீண்டும் திருமதி பண்டாரநாயக்கவுக்கு ஒரு பின்னடைவு ஏற்பட்டது. 1977 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிபீடம் ஏறியது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில், திருமதி பண்டாரநாயக்க அரசியல் அமைப்புச் சட்டத்தைத் துஸ்பிரயோகம் செய்தார் என அவர் மீது குற்றம் சாட்டி அவரது நாடாளுமன்றப் பதவியைப் பறித்ததுடன், 7 ஆண்டுகளுக்கு அவர் தேர்தல்களில் போட்டியிட முடியாதவாறு அவரது குடியியல் உரிமையும் பறிக்கப்பட்டது. முதலில் பிரதமராகப் பதவியேற்ற ஜே.ஆர். பின்னர் 1978 புதிய அரசியல் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து, தேர்தல் எதுவும் நடத்தாமலே தன்னை சர்வ வல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக ஆக்கிக் கொண்டார்.

திருமதி பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமையைப் பறிக்கும் தீர்மானம் 1980 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. தீர்மானத்துக்கு ஆதரவாக 139 வாக்குகளும், எதிராக 18 வாக்குகளும் அளிக்கப்பட்டன. திருமதி பண்டாரநாயக்க வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை.

வாக்களிப்பு நிறைவுற்றதும் நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் திருமதி பண்டாரநாயக்க சபையை விட்டு வெளியேறி தனது காரில் ஏறுவதற்காக படிகளில் இறங்கிச் சென்றார். முன்னாள் பிரதமரான அவர் ஏமாற்றமடைந்த நிலையில் தனியே படிகளில் இறங்கிச் செல்வதைக் கண்ணுற்று கவலையடைந்த நான் அவருடன் கூடச் சென்றேன்.

நாட்டினதும் உலகத்தினதும் முதல் பெண்மணியாக அறியப்பட்ட அவர், மிகவும் அசாதாரணமான சூழ்நிலையில் சபையை விட்டு வெளியேறிச் சென்றார். நான் அவருக்குப் பிரியாவிடை கூறினேன். பல வருடங்கள் கழித்து அவர் மீண்டும் பிரதமராக நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்தார்.

1996 ஏப்ரல் 8 ஆம் திகதி அவரது மகள் சந்திரிக குமாரதுங்க (Chandrika Kumaratunga) நாட்டின் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். அவரது அரசாங்கத்தில் தாயார் சிறீமாவோ பண்டாரநாயக்க பிரதமராகப் பதவி ஏற்றார். அந்த அரசாங்கத்தில் ஓர் அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் (Prof.G.L.Pieris) அவர்களால் 1980 ஆம் ஆண்டு பறிக்கபட்ட திருமதி பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமையை மீண்டும் மீட்டுக் கொடுக்கும் பொருட்டு ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நடந்த போது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவருமே வாயைத் திறக்கவே இல்லை.

அந்தத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடந்த பொழுது அவரது குடியியல் உரிமையை திரும்பவும் மீட்டெடுப்பதற்கு ஆதரவாக 124 உறுப்பினர்கள் வாக்களித்தனர். ஒருவர் தன்னும் எதிர்த்து வாக்களிக்கவில்லை.

# பிற்போக்கு சக்திகளின் மிரட்டல்களுக்கு சிரியா கம்யூனிஸ்ட் கட்சி அடிபணியாது!

ஆக்கிரமிப்பு நேட்டோ உறுப்பு நாடுகளின் காலனித்துவ சக்திகளால் ஆதரவளிக்கப்பட்ட இராணுவ கறுப்பு சக்திகளால் எமது நாட்டின் அதிகாரம் 2024 டிசம்பர் 8 ஆம் திகதி கைப்பற்றப்பட்ட பின்னர், அந்த சக்திகள் மக்களின் சமூக உரிமைகளைக் கட்டுப்படுத்தத் தொடங்கியுள்ளன. பல்லாயிரக்கணக்கான அரச மற்றும் பொதுத்துறைத் தொழிலாளர்களின் வசதிகள் நிறுத்தப்பட்டதின் காரணமாக நாட்டின் பொருளாதார, சமூக நிலைமைகள் மோசமடைந்துள்ளன. அத்துடன், மக்களது நம்பிக்கைகள் மற்றும் தொடர்புகளை வைத்து பாகுபாடு காட்டப்படுவதால் முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. ஆட்களைக் கடத்துதல், கொலை செய்தல், களவு, கொள்ளையடித்தல், மிரட்டுதல் என்பன நடைபெறத் தொடங்கியுள்ளன.

2025 ஜனவரி 29 இல் அரசியல் கொடுங்கோலாட்சியின் இருண்ட பக்கத்தின் தோற்றங்கள் மிகவும் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்துள்ளது. அன்றைய தினம் எவ்வித தகுதியுமின்றி, ஆயுதபலத்தால் மட்டும் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஆயுதக்குழுக்களின் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது.

அன்றைய கூட்டத்தில் நாட்டில் எதேச்சாதிகார அடிப்படையிலான அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. ஒரு தனி நபர் நாட்டின் நிறைவேற்று மற்றும் அரசமைப்பு ரீதியில் நாட்டை நிர்வகிப்பதற்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் துருக்கியின் உத்தரவுக்கு ஏற்ப மோசமான சர்வாதிகார முறையிலான ஆட்சியொன்றை நடத்துவதாகும். இந்த அபாயகரமான நிலைமை ஏகாதிபத்திய சக்திகளின் பிரதிநிதிகளுடனும், பிற்போக்கு அரபு




நாடுகளின் ஆட்சியாளர்களுடனும், நிரந்தரமான 'பாதுகாலனாக' இருக்கும் துருக்கி அரச பிரதிநிதிகளுடனும் எண்ணற்ற சந்திப்புகளை மேற்கொண்ட பின்னர், அவர்களது ஆசிர்வாதத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எல்லாவிதமான ஜனநாயக உரிமைகளையும் குப்பைத்தொட்டியில் வீசியெறியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிரியா கண்ணுக்குப் புலப்படாதவர்களினால் அவர்களது பின்னால் உள்ள சக்திகளின் நலன்களுக்காக எந்தவொரு அரசியல் சாசனமும் இல்லாத நாடாக மாற்றப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு அரசியல் சாசனம் ஒழித்துக்கட்டப்பட்டு, பொதுவான சமூக உரிமைகள் அனைத்தும் நீக்கப்பட்டு, எமது நாடு பிற்போக்கு சக்திகளின் சுவர்க்கமாக மாற்றப்பட்டுள்ளது. துருக்கிய காலனித்துவவாதிகள் தமது நாட்டில் மேற்கொள்ளாத முறையில் சிரியாவில் கண்ணுக்குப் புலப்படாத வகையில் தீவிர மாற்றங்களைச் செய்து வருகின்றனர். ஜனவரி 29இல் நடைபெற்ற கூட்டத்தின் போது, சிரிய கம்யூனிஸ்ட் கட்சி உட்பட பல தேசிய அரசியல் கட்சிகளைக் கலைப்பது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு முதல் நடவடிக்கை. இதைத் தொடர்ந்து எல்லா உண்மையான தேசிய மற்றும் ஜனநாயக சக்திகளுக்கும் தடை விதிக்கப்படும்.

100 ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்ததும், பல்வேறு சூழ்நிலைகளின் கீழ் பல விதமான போராட்டங்களை முன்னெடுத்ததுமான சிரிய கம்யூனிஸ்ட் கட்சி, இந்த நீதியற்ற உத்தரவை ஏற்று கட்சியை கலைத்துவிடப் போவதில்லை. இது சிரிய மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், தாய்நாட்டின் சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் மீட்டெடுப்பதற்காகவும் தொடர்ந்து போராடும். சிரிய கம்யூனிஸ்ட்டுகளான நாங்கள் அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் அஞ்சுபவர்கள் அல்ல என்பதற்கு வரலாறு ஒரு சான்றாகும். கொள்கை மீது எமக்கு இருக்கும் உறுதிப்பாட்டையும், மக்களுக்கு சேவை செய்வதில் எமக்கு இருக்கும் பற்றுறுதியையும் சிரிய மக்கள் நன்கறிவார்கள்.
இந்த நெருக்கடியான கட்டத்தில், கொடுங்கோல் ஆட்சியுடனும் அதன் இருண்ட அடக்குமுறையுடனும் முரண்படும் எமது நாட்டிலுள்ள அனைத்து நல்ல சக்திகளையும் அவர்களது கடந்தகால பின்னணியை கேள்விக்குட்படுத்தாது ஐக்கியப்படுத்துவதே தனது முதன்மையான கடமை என சிரிய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

தாய்நாட்டை விடுதலை செய்வதற்காகவும் மக்களின் நல்வாழ்வுக்காகவும் ஒன்றுபடுவோம்!

**-சிரிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு**
(2025 ஜனவரி 30)

நாம் பொதுவாக ஒரு புரட்சிகரமான சோசலிசம் அல்லது கம்யூனிச கோட்பாடுகளை கடைப்பிடிக்கின்றவர்களாக இருந்தால் மட்டும் போதாது. மாறாக சமூக வளர்ச்சி என்னும் சங்கிலித் தொடரின் ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்திலும் அதன் தொடர்புக் கண்ணியை கண்டறியும் திறன் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

**– லெனின்**

# விவசாயிகளை ஏமாற்றிய அரசாங்கம்!




ஜே.வி.பியும் அதன் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் (தே.ம.ச.) எதிர்க்கட்சியாக இருந்த சமயத்தில் விவசாயிகளுக்காக பல 'போராட்டங்களை' நடத்தினார்கள். தாம் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளின் வாழ்வில் சுபீட்சம் உண்டாகும் என மேடைக்கு மேடை முழங்கியும் வந்தனர்.

ஜனாதிபதியாக இருந்த கோத்தபாய ராஜபக்சவின் தவறான கொள்கைகளால் (முன்யோசனையற்ற இயற்கை உரத்திட்டம்) பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகள் ஜே.வி.பி. மற்றும் தே.ம.ச. கூட்டின் பேச்சை நம்பி அவர்களுக்கு ஜனாதிபதி தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தமது பெருவாரியான வாக்குகளை அள்ளிப்போட்டு வெற்றிபெற வைத்தனர்.

ஆனால் விவசாயிகளினதும் இதர உழைக்கும் மக்களினதும் வாக்குகளினால் ஆட்சிக்கு வந்த தே.ம.ச. அரசாங்கம் தமது வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு தம்மை நம்பிய மக்களை நட்டாற்றில் தவிக்க விட்டுள்ளது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த நாளிலிருந்து தாம் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு ஒரு உத்தரவாத விலையை நிர்ணயிக்கும்படி விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். ஆனால் அரசாங்கமோ "செய்யிறேன்...செய்யிறேன்" என அவர்களை ஏமாற்றி இழுத்தடித்து வந்தது. இந்த நிலைமையில் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்த விவசாயிகளின் அமைப்புகள், "நீங்கள் நெல்லுக்கு உடனடியாக உத்தரவாத விலையை நிர்ணயம் செய்யாவிடின், நாங்கள் இரண்டாவது அரகலய போராட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டி வரும்" என அறிவித்தனர்.

நிலைமை மோசமாவதைக் கண்ட அரசாங்கம், அவசரம் அவசரமாக சில ரக நெல் ரகங்களுக்கு உத்தரவாத விலையை அறிவித்துள்ளது. அதன்படி, நாடு ரக நெல் கிலோ 120 ரூபாவுக்கும், சம்பா ரக நெல் 125 ரூபாவுக்கும், கீரி சம்பா ரக நெல் 132 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படும் என அறிவித்தது. ஆனால் முக்கியமான சில நெல்ரகங்களுக்கு (சுக்குடு சிவப்பு மற்றும் வெள்ளை ரகங்கள்) உத்தரவாத விலையை அறிவிக்கவில்லை.

***நவம்***

இந்த அறிவிப்பால் விவசாயிகள் பலத்த ஏமாற்றம் அடைந்துள்ளனர். ஏனெனில், அவர்கள் தமது உற்பத்தி செலவுகளின்படி ஒரு கிலோ நெல்லை குறைந்தபட்சம் 140 ரூபாவுக்கு கொள்வனவு செய்தால்தான் தமக்கு கட்டுபடியாகும் எனக் கோரியிருந்தனர்.

அதுமாத்திரமின்றி, அரசாங்கம் நெல்லின் உத்தரவாத விலையை அறிவிப்பதற்கு காலத்தை இழுத்தடித்ததிற்கும் காரணம் உண்டு. அரசாங்கம் உத்தரவாத விலையை அறிவித்த நேரத்தில் விவசாயிகள் தமது நெல் உற்பத்தியில் ஏறத்தாழ 25 சதவீதமானவற்றை அறுவடை செய்து தனிப்பட்ட அரிசி ஆலை முதலாளிகளுக்கு மிகவும் குறைவான 80 முதல் 90 ரூபா வரையிலான விலைக்கு விற்றுவிட்டனர். தனிப்பட்ட அரிசி ஆலை முதலாளிகள் மலிவு விலையில் நெல்லைக் கொள்வனவு செய்து கொள்ளை இலாபம் ஈட்டுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காகவே அரசாங்கம் நெல்லுக்கு உத்தரவாத விலையை அறிவிப்பதற்குத் திட்டமிட்டு கால தாமதம் செய்தது என்ற சந்தேகம் தற்பொழுது விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

அரிசித் தட்டுப்பாட்டைக் காரணம்காட்டி தனிப்பட்ட வியாபாரிகள் வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளித்த அரசாங்கம், அந்த இறக்குமதி செய்த அரிசிக்கு இடைத்தரகராக நின்று கிலோவுக்கு 65 ரூபா வரி விதித்து பாவனையாளர்களின் பணத்தையும் சுரண்டியது. இப்பொழுது இன்னொரு புது விதமான தந்திரத்தில் உள்நாட்டு விவசாயிகளின் நெல் உற்பத்தியில் தனிப்பட்ட முதலாளிகள் கொள்ளை இலாபம் ஈட்டுவதற்கு வழி அமைத்துக் கொடுத்துள்ளது.

கோத்தபாயவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பதவிக்குக் கொண்டு வந்த விவசாயிகள், ஏமாற்றத்துக்குள்ளாகி தற்பொழுது செய்வதறியாது தவித்து நிற்கின்றனர்.

"உமியை விட சப்பட்டை திறம்" என அவர்கள் இப்பொழுது நினைக்கக்கூடும்.

---

மார்க்சிய நூல்களைப் படித்த பலர் ஓடுகாலிகளாக மாறிவிட்ட நிலையில், படிப்பறிவற்ற தொழிலாளிகள் மார்க்சியத்தை நன்கு கிரகித்துக் கொள்வதை நாம் அடிக்கடி காண்கிறோம். நாம் மார்க்சிய நூல்களை நிச்சயம் படிக்க வேண்டும். ஆனால் இந்தப் படிப்பு நமது தேசத்தின் உண்மையான யதார்த்த நிலைமையோடு ஒருங்கிணைக்கப்பட வேண்டும். நமக்கு புத்தகங்கள் தேவை. ஆனால் உண்மை சூழ்நிலையிலிருந்து விலகி நிற்கும் புத்தக வழிபாட்டை நாம் வெற்றிகொள்ள வேண்டும்.

**–மாவோ**

# உண்மையான சுதந்திரமா அல்லது போலிச் சுதந்திரமா?



*(பெப்ருவரி 4ஆம் திகதி இலங்கை தனது 77ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது. இலங்கையில் இருந்து பிரித்தானிய காலனித்துவவாதிகள் பௌதீக ரீதியாக வெளியேறிய 1948 பெப்ருவரி 4ஆம் திகதியையே நாம் சுதந்திர தினமாகக் கொண்டாடி வருகின்றோம். ஆனால் இன்றுவரை நாம் முழுமையான சுதந்திரம் பெறாமல் நவ காலனித்துவ நாடாகவே இருந்து வருகின்றோம்.*

*இலங்கைக்கு சுதந்திரம் என்ற பெயரில் பிரித்தானிய காலனித்துவவாதிகள் இலங்கை முதலாளித்துவ வர்க்கத்திடம் ஆட்சியைக் கையளித்த 1948 பெப்ருவரி 4ஆம் திகதி கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளார். பிற்காலத்தில் ரொட்ஸ்கியவாத லங்கா சமசமாஜ கட்சித் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த கொல்வின், இக்கட்டுரையை எழுதிய நேரத்தில் உலக ரொட்ஸ்கிய அமைப்பான நான்காவது அகிலத்தின் இந்திய கிளையான போல்ஸ்விக் – லெனினிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்தார்)*

பெப்ரவரி 4ம் திகதி திருமண பேரிகை சப்தத்துடன் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன் பின் தொடரும் விளையாட்டுக்கள் வானவேடிக்கையுடன் முடிவுறும். இவ் இடைவேளையில் ஆட்சியாளர் ஆளுநராக மாற்றப்படுவார். அரச பிரதிநிதி ஒருவர் வந்து போவார். எமது இலட்சக் கணக்கான பணம் விரயம் செய்யப்பட்டு, இலங்கைக்கு “பிரித்தானிய பொது நலவாய நாடுகளுள் பூரண பொறுப்பு வாய்ந்த நிலமை” கிடைக்கப்பெறும். இச் சகலவற்றுக்கும் மத்தியில், இந்த நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஏதாவது உள்ளதா?

மேற்குறித்த கேள்விக்கு மிகத்தெளிவாகவும் திட்டவட்டமாகவும் “இல்லை” என்பதே ஆகும். சேனநாயக்கா – மன்க் – மெசன்மூவரால் எம்மிடையே கொண்டுவரப்பட்டுள்ள “புதிய நிலமை” குறித்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய ஒன்றுமே கிடையாது. அவர்களால் பேரிகைகொட்டி அறிவிக்கப்பட்டுள்ள “சுதந்திரம்” குறித்து மக்கள் “மகிழ்ச்சியடைய” ஒன்றுமே கிடையாது. ஏனெனில் அவர்கள் கொடுக்கும் “புதிய நிலமை” எனப்படுவது “சுதந்திரம்” மட்டுமல்ல, பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடன் இலங்கை கட்டுண்டுள்ள அடிமைத்தனத்தின் வடிவத்தில் சற்று வித்தியாசம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. அதாவது, பிரித்தானிய ஏகாதிபத்தியமானது தனது ஆட்சியை இலங்கைக்குள் கொண்டு நடத்தும் வடிவத்தில் மாற்றமொன்றை ஏற்படுத்தி, தனது ஆட்சியை இடைநிறுத்தாது முன்னோக்கிச் செல்லும் என்பதே ஆகும்.

## கொல்வின் ஆர் டி சில்வா

இந்த ஆட்சி இடைநிறுத்தப்படாது எவ்வாறு முன்னோக்கி நகரவுள்ளது? உண்மையில், இன்றியமையாத வகையில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் பொருளாதார ரீதியில் இலங்கையின் குரல் வளையை நெரிப்பதை தொடர்ந்தும் முன்னெடுக்கும். எமது வங்கி அமைப்பு, எமது தோட்ட நிர்வாக அமைப்பு மற்றும் வெளி நாடுகளுடன் நாம் தொடர்புபடும் முறையும் அவர்ளால் நடத்தப்பட்டு அவர்கள் எமது பொருளாதாரத்தை நிர்வகிப்பவர்களாக உள்ளனர். மேலும் ஒரு நாட்டின் பொருளாதார முறையை நிர்வகிப்பவர்கள் எவரோ, அதனால், இறுதி ஆய்வுகளில், அவர்களே அந்நாட்டு அரசையும் நிர்வாகம் செய்பவராக உள்ளார்.

வேறு வார்த்தைகளில் கூறினால், எமக்கு எமது நாட்டுக் கொடியை உயர்த்த, தேசிய கீதம் பாட மற்றும் (பர்மாவைப் போல) பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாடென்று கூறிக் கொள்ளும் வாய்ப்பு கிட்டினாலும், பிரித்தானிய ஏகாதிபத்தியத்தியம் எமது பொருளாதாரத்தின் குரல்வளையை நெரிக்கும் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டிருக்காவிட்டால், நாம் பிரித்தானிய அடிமைகளாகவே இனிமேலும் சீவிப்போம். இந்த கொடிய குரல்வளை பிடியிலிருந்தும் விடுபடுவது மட்டுமே உண்மையான சுதந்திரத்தின் சாரம் ஆகும்.

அத்துடன், எவ்வாறாயினும், இப் புதிய நிலமையானது எமது அடிமைத்தனத்தை அப்படியே முன்கொண்டு செல்வது மட்டுமல்ல, அதன் வடிவத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதும் ஆகும் என்பதை நாம் கவனத்தில் கொள்வது அத்தியாவசியமானதாகும். முட்டாள்கள் மட்டுமே இலங்கை “நிலமையில் வேறுபாடில்லை” என்று கூறுவர். வேறுபாடு உள்ளது. எனினும், இவ்வேறுபாடு இருப்பது, இலங்கையானது காலனித்துவ நாடென்ற நிலமையிலிருந்து சுதந்திர நாடென்ற நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதில் அல்ல, மாறாக, பிரித்தானிய ஏகாதிபத்தியம் இலங்கையை நேரடியாக ஆட்சி செய்யும் முறையிலிருந்து, சுற்றி வளைத்து ஆட்சி செய்யும் முறைக்கு மாற்றப்பட்டுள்ளதிலேயே இருக்கின்றது.

இந்த மாற்றத்தின் உள்ளடக்கம் எங்கிருக்கின்றது? இலங்கையினுள் பிரித்தானிய ஏகாதிபத்திய நலன்களை பேணும் நடவடிக்கையை, உள்நாட்டு சுரண்டல் நடத்தும் வர்க்கத்திடம் முற்றாக ஒப்படைத்ததிலேயே அந்த மாற்றம் தங்கியிருக்கின்றது. பிரித்தானிய ஏகாதிபத்தியம் எந்த விதத்திலேனும் ஒழிக்கப்பட்டிருக்காததோடு அது பின்னணியில் இருக்கின்றது.

ஒருவர் இங்ஙனம் கேள்வி எழுப்பலாம். உள்நாட்டு சுரண்டல்காரர்கள் தமது எஜமானர்களை “தட்டிக் கேட்பதில்” இருந்து அவர்களைத் தடுப்பது எது? அதில் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்கள் சில உள்ளன. பிரித்தானிய அரசாங்கத்தால் இலங்கை அரசாங்கத்தின் மீது பலவந்தமாக திணிக்கப்பட்டுள்ள “ஒப்பந்தங்கள்” அதில் முதலாவதாகும். அவற்றில், இலங்கையின் கழுத்தை நெரிக்குமளவிற்கு இராணுவ மற்றும் வெளிவிவகார நடவடிக்கை சம்பந்தமான அதிகாரத்தை பிரித்தானியா தன் கையில் வைத்துக்கொள்வதை நிரந்தரமாக உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது. மேலும் இலங்கையில்

வாழும் பிரித்தானிய மற்றும் இலங்கை முதலாளித்துவ தட்டினருக்கு சொந்தமான பொருளாதார, அரசியல் மற்றும் நிதி சம்பந்தமான உரிமை அவற்றுடன் கட்டுண்டுள்ளன.

எனினும், இவை யாவற்றுக்கும் மேலான முக்கியமான விடயம் எதுவெனில், இலங்கை முதலாளிகளின் சாதாரண தேவைகளையும், விசேடமாக இலங்கை பிரஜைகளுக்கு எதிராக பேணப்பட்டு வரும் அவர்களுடைய உரிமைகளையும் தாங்கியிருக்கின்ற அடிப்படை அத்திவாரம், பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுடன் அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ ரீதியிலான அவர்களுடைய பிணைப்பே ஆகும்.

எமது முதலாளிமார்கள் ஒருபோதும் இலங்கையின் சுதந்திரத்தை கோரவில்லை. அவர்கள் கேட்டது எதை? பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பாகமாகவும், அதன் மரபுரிமையாகவும், இலங்கையை பேணிக்காக்கும் முழுப் பொறுப்பை மட்டுமே அவர்கள் கோரினர். தற்சமயம் அவர்களுக்கு அது கிடைத்துள்ளது.

இலங்கை மக்களுக்கும் அவர்களது போராட்டத்துக்கும் இந்த ஆட்சி முறை மாற்றம் மூலம் கிடைத்துள்ள பிரதிபலன் என்ன? அத்துடன், இவ்விடத்தில் கேட்க வேண்டியுள்ள முதலாவது கேள்வி, ஏகாதிபத்திய–எதிர்ப்பு போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டதா? என்பதே ஆகும். இந்த கேள்வியை கேட்பதிலேயே அதற்கான விடையும் உள்ளது. பொருளாதார முறை, பாதுகாப்பு நடவடிக்கைகள், வெளிநாட்டு உறவுகள் ஆகிய இவை அனைத்துமே, பிரித்தானிய ஏகாதிபத்தியம் என்ற பொறிக்குள் சிக்குண்டுள்ளன. அந்த நிலைமையிலிருந்து அவற்றை விடுவித்துக்கொள்ளும் போராட்டம் இப்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது – அதை முன்னெடுத்தே ஆக வேண்டும்.

தமது எஜமானாகிய “சேர் ஹென்றி மன்க் மெசன்மூவர்” (Sir Henry Monck-Mason Moore) என்பவருடன் இலங்கையின் பெயரில் டி.எஸ். சேனநாயக்க கூட்டு கையெழுத்திட்ட அடிமை ஒப்பந்தத்திற்கு எதிராக விசேடமாக நாம் போராடவேண்டும். ஆகையினால் இந்திய போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி (BLPI) மக்களுக்கு பின்வருமாறு வேண்டுகோள் விடுக்கிறது.

- பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தைத் தொடருங்கள்!
- பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள அடிமை உடன்படிக்கையை ஒழித்திடுங்கள்!

ஏகாதிபத்தியத்துக்கும் அடிமைத்தனத்துக்கும் எதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டிய அதேவேளை, இலங்கை மக்கள் முகங்கொடுத்து போராட வேண்டியுள்ள எதிரி யார்? முதலாவதாக அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருப்பது வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தின் துப்பாக்கி முனையை அல்ல, உள்நாட்டு முதலாளிகளது பொலிஸ் மற்றும் ஏனைய இராணுவப் படைகளையே ஆகும். பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை எமது பரம எதிரியாக கருதினாலும், இலங்கைக்குள் ஏகாதிபத்திய ஆட்சி வடிவத்தில் ஏற்பட்டுள்ள புதிய நிலமையை கருத்தில் கொண்டால், நாம் நேரடியாக எதிர் கொண்டுள்ள எதிரிகளாக உள்நாட்டு ஆட்சியாளர்களே மேலோங்கி நிற்கின்றனர்.

ஏகாதிபத்தியம் இறுதி நடவடிக்கையாக மட்டும் பயன்படுத்துவதற்காக, நேரடியாக ஆட்சி நிர்வாகத்தில் தலையிடும் உரிமையை தன் கையில் கொண்டுள்ளது. எழுச்சிபெற்று வரும் ஒடுக்கப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்குவதற்கான பிரதான பொறுப்பை இலங்கை முதலாளிகளிடம் ஒப்படைத்துள்ளது. மேற்குறிப்பிட்ட விதத்திலேயே வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கும் உள்நாட்டு முதலாளிளுக்கும் இடையிலான புதிய உடன்படிக்கையில் வேலைகள் பகிரப்பட்டுள்ளன. இலங்கையில் நிலவும் ஏகாதிபத்திய அதிகாரத்தை புரட்டிபோடுவதை நோக்கிய பயணத்தில், எமது முதலாளிகளுக்கு எதிராக செய்யும் போராட்டம் பிரதான போராட்டமாக விளங்குகின்றது.

ஏகாதிபத்தியம் ஒழிக என்பதன் அர்த்தம் ஏகாதிபத்திய–முதலாளித்துவ கூட்டு ஒழிக என்பதே ஆகும். இந்தக் கூட்டின் பிரதான ஆயுதமாக இருப்பது எதுவெனில், சோல்பரி அரசியல் யாப்பு காரணமாக (தற்போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள் உள்ளடங்கலாக மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவையும் சேர்த்து), சோல்பரி அரசில் யாப்பு மற்றும் அதனோடு இணைந்த அம்சங்களுக்கும் எதிரான எமது போராட்டத்தை இடைவிடாது முன்னெடுக்க வேண்டும். ஆகையால் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி இவ்வாறு உரத்துக் கூறுகின்றது.

- ஏகாதிபத்திய–முதலாளித்துவ கூட்டுக்கு எதிராகப் போராடு!
- சோல்பரி அரசியல் யாப்பு மற்றும் அதனோடு இணைந்த சகல பிரிவுகளும் ஒழிக!

பொதுமக்கள் குறித்த ஒரு சரியான அமைப்பிற்குள் ஒருங்கிணைந்தால் மட்டுமே ஏகாதிபத்தியத்திற்கும் ஏகாதிபத்திய–முதலாளித்துவ கூட்டுக்கும் எதிரான போராட்டம் சாத்தியமாகும். பொருளாதார முன்னரங்கில் தொழிலாளர்களது வெகுஜன இயக்கம் முன்னோக்கி நகருவதோடு சேர்த்து பலமாக வளர்ந்த தொழிற்சங்க இயக்கம் இன்று பலவீனமான பாதையில் உள்ளது. இந்த தொழிலாளர் அமைப்புகளை மீண்டும் சீர்திருத்தி கட்டியெழுப்ப வேண்டும்.

பரந்துபட்ட இயக்கத்துக்குள் ஒன்றிணைந்து, தைரியமான வேலைத் திட்டத்தை நோக்கி கிராமப்புற மக்கள் திரும்பும் நிலையில், யூலை வேலை நிறுத்த தோல்வியின் பின்னர், தொழிலாள வர்க்க வெகுஜன இயக்கம் பின்னடைந்துள்ளதால், கிராமப்புற மக்களுடைய அந்த முன்நோக்கிய பயணம், சற்று நிறுத்தப்பட்டுள்ளது. அந்த பயணத்திற்கு மீண்டும் புத்துயிரூட்ட வேண்டும். அதனூடாக மட்டுமே பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் அரச சேவையாளர்களுக்கு தொழிற்சங்க உரிமை இல்லை என்ற சட்ட விதிகளை ஏற்படுத்திய, ஏகாதிபத்திய–முதலாளித்துவ கூட்டின் ஊடாக உழைக்கும் மக்களுக்கு எதிராக தொடுக்கப்படும் தாக்குதல்களை தடுக்க முடியும். ஆகையினால் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி பின்வருமாறு அறைகூவல் விடுக்கின்றது.

- ஏகாதிபத்திய–முதலாளித்துவ கூட்டினை எதிர்கொள்வதற்காக உழைக்கும் மக்கள் அமைப்பினை மீண்டும் கட்டியெழுப்பு!
- பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் ஏனைய அடக்கு முறை சட்டம் ஒழிக!
- பேச்சும், எழுத்தும், கூட்டம் கூடும் மற்றும் ஒருங்கிணைவதற்குமான பூரண சுதந்திரத்துக்காகப் போராடு!

உழைக்கும் மக்களது வெகுஜன இயக்கத்தை மீண்டும் கட்டியெழுப்புவதும் அதனை

முன்னெடுப்பதற்கு இருக்கும் தடைகளை தகர்ப்பதற்கான போராட்டங்களை நடத்துவதும், எதிர்காலத்தில் உழைக்கும் மக்களால் நடத்தப்படவுள்ள கடும் போராட்டங்களுக்கான தயாரிப்புக்களாகும். அப்போராட்டமானது உக்கிரமடையும் வேலையின்மை, தீவிரமடையும் வறுமை போன்றவற்றுக்கு எதிரான போராட்டமாகும். பெரும் வர்த்தக சீரழிவுக்கான சமிக்ஞை காணப்படுகின்றது. வேலை நீக்கம் செய்வது அதிகரிக்கின்றது. யுத்தகாலத்தின் போதான மோசடித்தனமான செழுமை அகற்றப்பட்டு, வறுமை அதிகரிக்கின்றது. வேலை அல்லது வாழ்க்கையை நடத்துவதற்கான தேவைகளைப் பெறுவதற்கான போராட்டத்தை இக்காலத்தில் முன்னெடுப்பதற்கான வழிமுறையாக போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி பின்வருமாறு கோருகிறது.

- வேலை நீக்கம் செய்வதை நிறுத்து!
- சம்பள குறைப்பின்றி வேலை நேரத்தை குறை!
- இருக்கின்ற வேலையை சகல தொழிலாளர்களுக்கும் பகிர்ந்தளி!
- யுத்தத்திற்கு முன்பிருந்த அளவிற்கு விலை வாசியை குறைத்திடு!
- ஏழைகளை வரிச் சுமையில் இருந்து விடுவிப்பதற்கு செல்வந்தர்களிடம் அறவிடும் வரியை அதிகரித்திடு!
- விலை வாசி உயர்வுக்கேற்ப சம்பள அதிகரிப்பை வழங்கு!

முழு உழைக்கும் மக்களது போராட்டத்தையும் அமைப்புரீதியாக முன்னெடுத்துச் செல்ல ஒரே ஒரு வர்க்கத்தால் மட்டுமே முடியும். அது தொழிலாள வர்க்கமே ஆகும். எனினும், இன்று தொழிலாள வர்க்கம் கூட கருத்து வேறுபாடுற்று, சஞ்சலப்பட்டு, பேதப்பட்டு காணப்படுகின்றது. தொழிலாள வர்க்கத்தை செயற்பாட்டில் அணிதிரட்டுவதை உடனடியாக சீக்கிரமாக செய்ய வேண்டும். வர்க்கத்தை பாதுகாக்க அதனால் மட்டுமே முடியும். முழு உழைக்கும் மக்களையும் போராட்டத்தில் ஈடுபடுத்துவது என்பது இதனூடாக மட்டுமே சாத்தியமாகும்.

உழைக்கும் மக்களை செயற்பாட்டு ரீதியில் அணிதிரட்டும் முகமாக தொழிலாள வர்க்க கூட்டினை கட்டியெழுப்புவோம். உழைக்கும் மக்களது போராட்டத்திற்கான தலைமையை தொழிலாள வர்க்க தலைமைத்துவமே வழங்க வேண்டும்.

தொழிலாள வர்க்க கூட்டினை ஏற்படுத்துவதற்கான வழி, தொழிலாள வர்க்க அரசியல் கட்சிகள் மத்தியிலான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதாகும். வேலைத்திட்டம் மற்றும் செயற்பாடு தொடர்பாக அக்கட்சிகளிடையே தேவையான போராட்டம் காணப்படலாம். எனினும் அக்கட்சிகளிடையே காணப்படும் வேறுபாடுகள், தொழிலாள வர்க்கத்துக்கு, செயற்பாடுகளின் போது விரோதமானதாக இருந்துவிடக் கூடாது. இக்கால கட்டத்தில் போல்ஷிவிக்–சமசமாஜ–கம்யூனிச ஐக்கிய முன்னணி ஒன்று ஏற்படுத்தப்படாவிடின், தலைதூக்கி வரும் ஏகாதிபத்திய–முதலாளித்துவ தாக்குதல்களுக்கு எதிராக ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டிய உழைக்கும் மக்களது இயக்கம் பலவீனம் அடையும். ஆகையினால் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி பின்வருமாறு அறைகூவல் விடுக்கின்றது.

- போல்ஷிவிக்–சமசமாஜ–கம்யூனிஸ்ட் ஐக்கிய முன்னணி ஒன்று தேவை!
- முதலாளித்துவ ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் ஒழிக!
- தொழிலாளர்–விவசாயிகள் அரசாங்கத்துக்காக வீதிக்கு இறங்குவோம்!
- புரட்சிக்கு வெற்றி கிடைக்கட்டும்!

# பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற வார்த்தை மார்க்சிய அரிச்சுவடியில் உள்ள முக்கியமான வார்த்தைகளில் ஒன்று.

இந்த வார்த்தையை கார்ல் மார்க்ஸ் தான் முதன்முதலாக உலகிற்கு அறிமுகப்படுத்தினார். அவர் 1850இல் எழுதி வெளியிட்ட, "பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள்: *1848 முதல் 1850 வரை*" என்ற நூலில்தான் அவர் இந்த வார்த்தையை முதன்முதலாகப் பயன்படுத்தியுள்ளார்.

மார்க்சிய மூலவர்களான மார்க்ஸ், ஏங்கல்ஸ் வாழ்ந்த காலத்தில் உலகம் முழுவதும் நிலப்பிரபுத்துவ சக்திகளினதும் அவர்களது வழிவந்த எதேச்சாதிகார சக்திகளினதும் எதிர்ப் புரட்சிகர சர்வாதிகார ஆட்சிகளே கோலோச்சின.

எனவே, பாட்டாளி வர்க்கம் அந்த ஒடுக்குமுறை ஆட்சிகளை ஆயுதம் தாங்கிய புரட்சிகர பலாத்காரத்தால் மட்டுமே தூக்கியெறிய முடியும் என வலியுறுத்திய மார்க்சிய மூலவர்கள், புரட்சிக்குப் பினனர் பாட்டாளி வர்க்கம் நிறுவும் சோசலிச அரசைப் பாதுகாப்பதற்கு ஒரு குறிப்பிட்ட சரித்திரக் காலம் வரை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நடைமுறைப்படுத்துவது அவசியமானது என வலியுறுத்தினர். உலகின் முதலாவது பாட்டாளி வர்க்க அரசாக பிரான்சில் 1871 மார்ச்சில் உருவான 'பரீஸ் கம்யூன்' எதிரிகளால் வீழ்த்தப்பட்டதற்கு அங்கு புரட்சிவாதிகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நடைமுறைப்படுத்தத் தவறியதும் ஒரு காரணம் எனச் சுட்டிக் காட்டினர்.

அதேபோல, ஜார் மன்னனின் நிலப்பிரபுத்துவ எதேச்சாதிகார ரஸ்யாவில் பாட்டாளி வர்க்க புரட்சிக்குத் தலைமை தாங்கிய லெனின் அவர்களும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அவசியத்தை வலியுறுத்தியதுடன், சோசலிச சோவியத் யூனியனில் அதை நடைமுறையும் படுத்தினார். அவரைத் தொடர்ந்து சோவியத் யூனியனுக்கு தலைமை வகித்த ஸ்டாலின் அவர்களும் 1954இல் தான் இறக்கும் வரை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கறாராக நடைமுறைப்படுத்தினார்.

ஆனால், சீனப் புரட்சிக்குத் தலைமை வகித்த மாஓ சேதுங் அதை வேறு விதமாக நடைமுறைப்படுத்தினார். சீனப் புரட்சி யப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கும், நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மைக்கும் எதிராக நடத்தப்பட்டதால், அது ஆரம்பத்தில் ரஸ்யாவில நடந்தது போல சோசலிசப் புரட்சி என்ற வடிவத்தை எடுக்காமல், புதிய ஜனநாயகப் புரட்சி என்ற வடிவத்தை எடுத்தது. ஆதனால் புரட்சிக்குப் பின்னர் சீனாவில் அமைந்த அரசை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி "மக்கள் ஜனநாயக அரசு" என வகைப்படுத்தியதுடன், அந்த அரசை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க "மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம்" என்ற வழிமுறையையும் பின்பற்றியது.

ஆனால் இன்றைய உலகின்

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# USAID நிறுவனத்துக்கு மூடு விழா! ட்ரம்பின் நோக்கம் என்ன?

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோன் எஃப் கெனடியால் (John F.Kennedy) 1960 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட USAID (United States Agency for International Assistance – சர்வதேச உதவிக்கான அமெரிக்க முகவரகம்) என்ற நிறுவனத்தின் செயல்பாடுகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதென அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பும் அவரது பொருளாதார ஆலோசகர் எலென் மஸ்கும் (Elon Musk) தீர்மானித்துள்ளனர்.

இந்த நிறுவனத்தின் செயல்பாடுகள் பயனற்றவை என்றும், அமெரிக்காவுக்கு பெருந்தொகையான பணச்செலவை ஏற்படுத்தியுள்ளது என்றும், இதில் செயற்படுபவர்கள் “இனவெறி கொண்ட மனப்பிறவாளர்கள்” என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ள அதே வேளையில், இதுவொரு “கிரிமினல் அமைப்பு” (Criminal Organization) என எலென் மஸ்க் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் அந்த நேரத்தில் சோசலிச சோவியத் யூனியனுக்கு ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் உருவாகி வந்த செல்வாக்கைத் தடுப்பதாகும்.

ஆனால், இந்த நிறுவனம் செய்ததெல்லாம், வளர்முக நாடுகளில் இருந்த மேல்தட்டு வர்க்கத்தினரையும் புத்திஜீவிகளையும் இலஞ்சம் மூலம் விலைக்கு வாங்கி அவர்கள் மூலம் சம்பந்தப்பட்ட நாடுகளில் அரசியல் குழப்பங்களை உருவாக்கி அமெரிக்காவுக்குச் சார்பான நிலைமையைத் தோற்றுவித்ததுதான். சில நாடுகளில் (உக்ரைன் உட்பட) ஆட்சிக் கவிழ்ப்புகளையும் இந்த அமைப்பு நிகழ்த்தி இருக்கிறது.

அண்மையில் இந்த அமைப்பின் செயல்பாடுகள் பற்றி வெளிவந்த தகவல்களில் வெனிசூலாவில் மதுரோவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான முயற்சிகளில் இந்த அமைப்பு ஈடுபட்டமை தெரிய வந்திருக்கிறது. அதேபோல, சில வருடங்களுக்கு முன்னர் கியூபாவில் உள்ள சோசலிச அரசுக்கு எதிராக மக்களின் ஒரு பிரிவினரைத் தூண்டி விட்டதிலும் இந்த அமைப்பே பின்னணியில் இருந்தமை தெரிய வந்திருக்கிறது. தென் அமெரிக்காவில்



உள்ள அமெரிக்காவுக்கு எதிரான நாடுகளில் இந்த அமைப்பு மேற்கொண்ட சீர்குலைவு நடவடிக்கைகளும் அம்பலத்துக்கு வந்துள்ளது. கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் அது சம்பந்தமான பணிகளை இந்த அமைப்பு கேடயமாகப் பயன்படுத்தியுள்ளது என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

இலங்கை உட்பட சுமார் 70 நாடுகளில் இந்த அமைப்பு செயல்படுகின்றது. மொத்தமாக 10,000 பேர் வரையில் இதில் பணி புரிகின்றனர்.

இந்த அமைப்பு உலகம் முழுவதும் ‘அரச சார்பற்ற அமைப்புகள்’ என்ற பெயரில் பல அமைப்புகளை உருவாக்கி செயற்பட்டு வருகின்றது. இலங்கையிலும் அவ்வாறான பல அமைப்புகளுக்கு இந்த நிறுவனம் மில்லியன் கணக்கில் பண உதவி செய்கின்றது.

2022ஆம் ஆண்டு இலங்கையில் கோத்தபாய ராஜபக்ச தலைமையில் இருந்த அரசை வீழ்த்துவதற்காக நடத்தப்பட்ட ‘அரகலய’ என்ற கிளர்ச்சியின் பின்னணியில இந்த அமைப்பும் வேறு சில வெளிநாட்டு அமைப்புகளும் இருந்ததாக நம்பப்படுகிறது.

அதேபோல, இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வந்ததிலும் இத்தகைய அமைப்புகளுக்குப் பெரும் பங்குண்டு.

ஜனாதிபதி ட்ரம்ப் இந்த நிறுவனத்தைக் கட்டுப்படுத்த முயல்வதின் காரணம், இந்த அமைப்பு அமெரிக்க ஆதிக்கத்தை நிலைநாட்ட மற்றைய நாடுகளில் சீர்குலைவு வேலைகளில் ஈடுபடுகின்றது என்பதல்ல. தனது அதிகாரத்துக்கு இந்த நிறுவனத்தின் தலைமையில் உள்ளவர்கள் கட்டுப்படுகிறார்கள் இல்லை என்பதும் ட்ரம்பின் கோபத்துக்கு இன்னொரு காரணம்.

இந்த நிறுவனத்தை தனக்கு இசைவான முறையில் சீரமைத்த பின்னர், முன்னரிலும் பார்க்க வலுவாகவும் வேகமாகவும் இதை ட்ரம்ப் செயல்பட வைப்பார் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

–முரளி

---

14ம் பக்கத்தொடர்ச்சி...

நிலைமைகள் மார்க்ஸ் காலத்தினது அல்லது லெனின் காலத்தினது போல அல்லாமல் பெருமளவுக்கு மாறிவிட்டது. இன்று முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற முறை சகல நாடுகளிலும் ஜனரஞ்சகமாகவிட்டதால், கம்யூனிஸ்ட் கட்சிகளும் அதில் ஈடுபடுவதைத் தமது பிரதான வழிமுறைகளில் ஒன்றாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள். அதனால் உலக நாடுகளில் உள்ள பெரும்பாலான கம்யூனிஸ்ட் கட்சிகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிப் பேசுவதைத் தவிர்த்து வருகின்றன.

இருப்பினும், இப்பொழுது கூட ஏதாவது ஒரு நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி ஒரு சோசலிச அரசை நிறுவினால், அந்த அரசைப் பாதுகாக்க பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதை விட வேறு வழியில்லை.

–மணி

**முன்பக்கத்தொடர்ச்சி...**

கீழேயே செய்து வந்தனர். பண்டாரநாயக்க அரசுகள் தேசியமயத் திட்டங்களின் கீழ் பிரித்தானியரின் பொருளதாரப் பிடிகளை ஓரளவு தகர்த்தாலும், அரசியல் ரீதியில் அவர்கள் எடுத்த இரண்டு நடவடிக்கைகள் முக்கியமானவை.

ஒன்று, பண்டாரநாயக்க அரசு 1956 இல் பதவி ஏற்றதும் கட்டுநாயக்காவிலும், திரிகோணமலையிலும் இருந்த பிரித்தானியப் படைத்தளங்களை அகற்றியமை. (இந்தத் தளங்களை அகற்ற வேண்டாம் என அந்த நேரத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் சா.ஜே.வே.செல்வநாயகம் பிரித்தானியாவின் எலிசபெத் மகாராணிக்கு தந்தி அனுப்பினார் என்பது தமிழ் மக்கள் வெட்கப்பட வேண்டிய ஒரு வரலாறு)

இரண்டாவது, திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையில் இடதுசாரிகளையும் உள்ளடக்கி 1970இல் அமைந்த 'மக்கள் முன்னணி' அரசு, அதுவரை நடைமுறையில் இருந்த சோல்பரி அரசியல் யாப்பை நீக்கிவிட்டு, அதனிடத்தில் புதிய குடியரசு அரசியல் யாப்பு ஒன்றை நிறுவியமை. இந்த குடியரசு யாப்பின் மூலம் இலங்கைக்கு அதுவரை காலமும் இருந்த பிரித்தானிய முடியரசுடனான தொடர்பு முற்றாக நீக்கப்பட்டது.

ஆனால், இலங்கையின் படுபிற்போக்கான அரசியல்வாதியும், தீவிர ஏகாதிபத்திய விசுவாசியுமான ஜே.ஆர்.ஜெயர்த்தன 1977 இல் ஆட்சிக்கு வந்ததும், அவர் 1978 இல் கொண்டு வந்த எதேச்சாதிகாரம் மிக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைக் கொண்ட அரசியல் யாப்பு, பண்டாரநாயக்க அரசுகள் அதுவரை மேற்கொண்டிருந்த தேசிய நலன் கருதிய திட்டங்கள் எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டது.

ஜே.ஆரின் அரசியல் யாப்பின் கீழ் இலங்கை மிகவும் மோசமான நவ காலனி நாடாக மாற்றப்பட்டுள்ளது. அதன் காரணமாக, 1948 இல் பெற்ற சுதந்திரமும், 1972 இல் பெற்ற குடியரசு அந்தஸ்தும் அர்த்தமில்லாமல் போய்விட்டன. இந்த எதேச்சாதிகார அரசியல் யாப்பை ஜே.ஆரின் ஆட்சிக்குப் பின்னர் அதிகாரத்துக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் நீக்குவதாகச் சொன்னாலும், அந்த அரசியல் யாப்பே இன்று வரை தொடர்கிறது.

தம்மை இடதுசாரிகள் என்று சொல்லிக்கொண்டு ஆட்சிக்கு வந்துள்ள இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் ஜே.ஆரின் அரசியல் யாப்பின் கீழேயே செயல்படுகிறது. இந்த யாப்பை தாம் ஆட்சிக்கு வந்தால் நீக்குவோம் எனச் சொல்லிக் கொண்டு அவர்கள் ஆட்சிக்கு வந்தாலும், அதற்கான முயற்சிகள் எதனையும் அவர்கள் எடுப்பதாகக் காணோம்.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் ஆட்சியில் அமர்ந்த இரண்டு முதலாளித்துவக் கட்சிகளும் 77 ஆண்டுகளாகப் பின்பற்றிய தவறான கொள்கைகள் காரணமாக நாடு திவால் நிலையை அடைந்து 2022 இல் இலங்கை தன்னை 'வங்குரோத்து அடைந்த நாடு' என அறிவிக்க வேண்டி வந்தது. அதன் விளைவாக மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டு, அந்த நிலைமையைப் பயன்படுத்தி ஏகாதிபத்திய சக்திகள் ஆட்சி மாற்றமொன்றையும் தமக்குச் சாதகமாக ஏற்படுத்தின. அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அமைந்துள்ளது.

சரியாகச் சொல்வதானால், இலங்கை சுதந்திரமடைந்த 1948 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டுவரை இலங்கையை மறைமுகமாக ஆட்சி புரிந்து வந்த ஏகாதிபத்திய சக்திகள், இப்பொழுது நேரடியாக சர்வதேச நாணய நிதியம் என்ற தமது சர்வதேச மூலதனத்தின் மூலம் இலங்கையை ஆட்சி செய்யத் தொடங்கியுள்ளனர். இப்பொழுது இலங்கை எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை இதுதான்.

சொல்லப்போனால், இலங்கையின் தேசிய சுதந்திரம், இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு என்பன முன்னொரு போதும் இல்லாத வகையில் சவாலுக்கு உள்படுத்தப்பட்டுள்ளது. அதிலிருந்து விடுபடுவதே இன்று இலங்கை மக்கள் முன்னாலுள்ள பிரதான கடமையாகும்.

அதாவது, இலங்கையர்களுக்கு உண்மையான சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை. சர்வதேச ஏகாதிபத்தியத்தினதும், பிராந்திய வல்லாதிக்கத்தினதும் பிடியிலிருந்து இலங்கைத் தேசம் விடுபடும் போதே இலங்கை மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்கும்.

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

தெற்கில் உள்ள தொழிலாளர்களை, குறிப்பாக பெண் தொழிலாளர்களை, முதன்மையாக உலகளாவிய வடக்கை அடிப்படையாகக் கொண்ட பணக்கார பங்குதாரர்கள் தொடர்ந்து சுரண்டி வருகின்றனர்.

வரலாற்று காலனித்துவ காலத்தில் முக்கியமானதாக இருந்த சமத்துவமின்மை மற்றும் கொள்ளை, நவீன வாழ்க்கையை தொடர்ந்து வடிவமைத்து வருகிறது. இது ஒரு ஆழமான சமத்துவமற்ற உலகத்தை உருவாக்கியுள்ளது. இனவெறியை அடிப்படையாகக் கொண்ட பிரிவினையால் பிளவுபட்ட ஒரு உலகம், உலகளாவிய வடக்கில் உள்ள பணக்காரர்களுக்கு முதன்மையாக பயனளிப்பதாக சூழல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த உலகலாவிய வடக்கு, உலகளாவிய தெற்கிலிருந்து செல்வத்தை தொடர்ந்து சுரண்டி வருகிறது.

1750 ஆம் ஆண்டில், இந்திய துணைக்கண்டம் உலகளாவிய தொழில்துறை உற்பத்தியில் தோராயமாக 25 சதவீதத்தைக் கொண்டிருந்தது. ஆனால், 1900 வாக்கில் இந்த எண்ணிக்கை வெறும் 2 சதவீதமாகக் குறைந்துவிட்டது. இவ்வாறு ஒக்ஸ்ஃபாம் அறிக்கை தெரிவிக்கிறது.

**நன்றி:**

https://oi-files-d8-prod.s3.eu-west-2.amazonaws.com/s3fs-public/2025-01/English%20-%20Davos%20Full%20Report%202025.pdf

போராட்டம் இருந்தால் தியாகம் உண்டு. மக்களின் நலன்களையும் பெரும்பான்மையினரின் துன்ப துயரங்களையும் மனதில் கொண்டு மக்களுக்காக உயிர் விட்டால் அது தகுதியான சாவாகும். அநாவசியமான தியாகங்களை தவிர்க்க நம்மால் முடிந்தது அனைத்தையும் செய்ய வேண்டும். இறப்பு என்பது அதன் முக்கியத்துவத்தில் வேறுபட்டது. மக்களின் நலன்களுக்காக மரணமடைவது மலையை விட உயர்ந்தது. உழைத்துச் சுரண்டுவோருக்கும் ஒடுக்கு முறையாளருக்குமாக இறப்பது இறகை விட இழிந்தது.

**–மாவோ**

‘Vaanavil’ is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# இராணுவத்தின் மீது ஜே.வி.பிக்கு உள்ள தீராத காதல்!



இலங்கையில் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அரிசிக்குத் தட்டுப்பாடும், விலையுயர்வும் ஏற்பட்டதற்கு அரிசி ஆலை முதலாளிகள் அரிசியை பதுக்கி வைத்திருப்பதுதான் காரணம் எனக் கருதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, அரிசி ஆலை முதலாளிகளுக்கு கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்திருந்தார். அதில் அவர்,

“அரிசி ஆலை முதலாளிகள் பதுக்கி வைத்துள்ள அரிசியை வெளியே விடத் தவறினால், இராணுவத்தை அனுப்பி, அந்த அரிசியை வெளியே வெளியே கொண்டுவந்து மக்களுக்கு விநியோகிப்போம். முடியுமானால் மோதிப் பாருங்கள்” எனச் சவாலும் விடுத்திருந்தார். இவ்வாறான இராணுவ நடவடிக்கை ஜனநாயக ரீதியானதா என அவரிடம் கேட்கப்பட்டபோது, இந்த நாட்டில் அரிசி விடயத்தில் ஜனநாயகம் பற்றி பேசுவது அபத்தமானதென அவர் தெரிவித்துள்ளார்.

முதலாவது கேள்வி, இராணுவத்தை அனுப்பும் அளவுக்கு அரிசி ஆலை முதலாளிகள் கட்டுப்படுத்தப்பட முடியாத பயங்கரமான கிரிமினல்களா என்பது.

இரண்டாவது கேள்வி, பதுக்கல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் அரச அதிகாரிகள் மூலம் அல்லது பொலிசார் மூலம் இந்த நடவடிக்கையைச் செய்ய முடியாதா என்பதாகும். மூன்றாவது கேள்வி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு இராணுவப் பாதுகாப்புத் தேவையில்லை எனக்கூறி, அவரது இராணுவப் பாதுகாப்பை நீக்கிவிட்டு பொலிஸ் பாதுகாப்பு மட்டும் வழங்கிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், அரிசி பதுக்கலைக் கண்டுபிடிக்க மட்டும் இராணுவத்தை நாடுவதன் நோக்கம் என்ன? எதிர்காலத்தில் தமது அரசாங்கம் இராணுவ ரீதியில்தான் மக்கள் பிரச்சினைகளைக் கையாளும் என்பதை உணர்த்தவா?

ஜே.வி.பினருக்கு மக்களை விட இராணுவத்தின் மீதுதான் அதிக நம்பிக்கை உள்ளது என்பதற்கு இதுதான் முதல் உதாரணம் அல்ல.

1971 இல் அன்றைய திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் முன்னணி அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக ஜே.வி.பி. ஆயுதக் கிளர்ச்சி ஒன்றை நடத்தியது. அந்த நேரத்தில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் கிராமப்புறங்களில் உள்ள சில பொலிஸ் நிலையங்களைத் தாக்கி கைப்பற்றி, அவற்றில் சிலவற்றைச் சில நாட்கள் தமது கட்டுப்பாட்டிலும் வைத்திருந்தனர். ஆனாலும் அந்தக் கிளர்ச்சி அரசாங்கத்தால் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டுத் தோல்வி கண்டது.

தமது தோல்விக்கான காரணத்தை பின்னொரு சந்தர்ப்பத்தில் விளக்கிய ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜேவீர, “இராணுவத்தினர் எமக்கு வாக்குறுதி அளித்தபடி தலைநகரான கொழும்பைக் கைப்பற்றத் தவறியபடியால்தான் தோல்வி ஏற்பட்டது” எனக் கூறினார். எப்படி இருக்கிறது, மார்க்சியப் புரட்சியாளர்கள் பிற்போக்கு அரசு இயந்திரத்தின் இராணுவத்தை நம்பி புரட்சி செய்யப் புறப்பட்ட இலட்சணம்?

இந்த இடத்தில் முக்கியமான ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுவது அவசியம்.

அதாவது, 1962 இல் அப்போதிருந்த சிறீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் தீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் இருந்த உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளும், அவர்களுக்குச் சார்பான வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளும் இணைந்து, இராணுவச் சதி ஒன்றின் மூலம் சிறீமாவோவின் அரசைக் கவிழ்க்க முயன்றனர். ஆனால் அது தோல்வியில் முடிந்தது.

அதுபோல, 1971 இல் தீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சிறீமாவோ தலைமையிலான மக்கள் முன்னணி அரசை ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சி மூலம் கவிழ்க்க முயன்ற உள்நாட்டு – வெளிநாட்டு பிற்போக்கு சக்திகள் அதற்காக இராணுவத்தையும் பயன்படுத்த முயன்றிருக்கின்றனர்.

இந்த இரண்டு நிகழ்வுகளும் ஒரே நோக்கத்துக்காக, ஒரே விதமான சக்திகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இதன் மூலம் காண முடியும்.

இதுதவிர, புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில் தமிழ் மக்கள் மீது இலங்கை அரச இராணுவம் பாரிய தாக்குதல்களை நடத்திய காலத்தில் ஜே.வி.பியினர், ஆயிரக்கணக்கான கிராமப்புற சிங்கள இளைஞர்களை இராணுவத்துக்குச் சேர்த்துக் கொடுத்ததை மறந்துவிட முடியுமா?

இது எதைக் காட்டுகிறது? அன்று தொடக்கம் இன்றுவரை, ஜே.வி.பி. என்ற போலி இடதுசாரி இயக்கம், மக்களை நம்புவதை விடுத்து, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், அதைத் தக்க வைப்பதற்கும், பிற்போக்கு அரசு இயந்திரத்தின் பிரதான அங்கமான இராணுவத்தை நம்பியிருப்பதைக் காட்டவில்லையா?

அரிசி ஆலை முதலாளிகளுக்கு எதிராக இராணுவத்தைப் பயன்படுத்துவேன் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க விடுத்த எச்சரிக்கையை அதற்கான பிந்திய உதாரணமாகக் கொள்ளலாம்.

– முருகதாஸ்